பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 19 திங்கட்கிழமை (03.07.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 217

## பணிப்புறக்கணிப்பு இன்று முதல் நிறுத்தம்!

யாழ்ப்பாணம்,ஜூலை3

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்று வந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இன்று முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக யாழ்.மாவட்டத் தமிழ்த்தேசிய தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

பொதுமக்களின் அச்சுறுத்தலற்ற வாழ்வுக்கு வழி ஏற்படுத்தக் கோரி கடந்த திங்கட்கிழமை முதல் யாழ்.குடாநாட்டில் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகள் அனைத்தும் முற்றாகச் செயலிழந்திருந்தன.

இந்தநிலையில் - பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை இன்று முதல் தற்காலிகமாக இடைநிறுத்துவதென தீர்மானிக்கப்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட தமிழ்த்தேசிய தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு நேற்றிரவு விடுத்த பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு :-

யாழ்.குடாநாட்டில் தொடர்ந்த இராணுவ நெருக்குவாரங்கள் மற்றும் கொலை அச்சுறுத்தல்களை நிறுத்துமாறு கோரி எம்மால் ஆரம்பிக்கப்பட்ட பணிப்புறக் கணிப்புப் போராட்டம் கடந்த மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையினைக் கருத்தில்கொண்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

# மஹிந்தவின் கடும் போக்கு நிலைப்பாடே இந்த மென்தீவிர யுத்தத்துக்குக் காரணம்

## மதியுரைஞர் பாலசிங்கம் குற்றச்சாட்டு



லண்டன், ஜூலை3

**இலங்கையில் தற்போது நிலவும் மோசமான யுத்த சூழ்நிலைக்கு முழுக் காரணகர்த்தா இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான் என்று குற்றம் சுமத்தியிருக்கின்றார் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.**

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடைப்பிடிக்கும் கடும்போக்கு நிலைப்பாட்டின் பெறுபேறே தற்போதைய மென்தீவிர யுத்தம் என்றும் மதியுரைஞர் பாலா குறிப்பிட்டிருக்கின்றார்.**

இந்தியத் தொலைக்காட்சியான என்.டி.ரி.விக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

கடந்த 25 ஆம் திகதி லண்டனில் உள்ள பாலசிங்கத்தின் இல்லத்தில் வைத்து என்.டி.ரி.வி ஒளிப்பதிவு செய்த பேட்டியின் ஒரு பகுதி மட்டும் 27 ஆம் திகதி இரவு அச் சேவையில் ஒளிபரப்பானது.

இந்தப் பேட்டியின் எஞ்சிய பிரதான பகுதிகள் நேற்றிரவு 9.30 மணிக்கு ஒளிபரப்பாக இருந்தன. இப்பேட்டியின் சில விடயங்களை அந்தச் சேவையின் இணையத்தளம் நேற்றுப் பகல் வெளியிட்டது. அதிலேயே பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார் எனக் கூறப்பட்டது.

பாலசிங்கம் தெரிவித்தார் எனக் குறிப்பிட்ட இந்த இணையத்தளம் தெரிவித்த ஏனைய

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டின் பல பகுதிகளில் நேற்றுத் தேடுதல்

யாழ்ப்பாணம்,ஜூலை3

யாழ்.குடாநாட்டில் நேற்றுப் பரவலாக பல இடங்களிலும் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

வடமராட்சியில் வதிரி, துன்னாலை, புலோலி பகுதிகள் நேற்று அதிகாலை முதல் படையினரின் சுற்றிவளைப்புக்கு உட்படுத்தப்பட்டன. வீடு வீடாகச் சென்ற படையினர் அடையாள அட்டைகளைப் பரிசீலித்ததுடன் இளைஞர், யுவதிகளையும் விசாரணைக்கு உட் படுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

(12ஆம் பக்கம் பார்க்க)

## படையினரை இலக்கு வைத்து பல இடங்களிலும் தாக்குதல்!

கோண்டாவில்,ஜூலை3

கோண்டாவில் டிப்போவுக்குச் சமீபமாக நேற்றுப் பிற்பகல் 3.45 மணியளவில் படையினரை இலக்குவைத்துக் கிரனேட் வீசப்பட்டது. அத்துடன் படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் படைத்தரப்புக்கு ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. படையினர் மீதான வேட்டுக்களை அடுத்து படையினரும் பதிலுக்கு வேட்டுக்களைத் தீர்த்தனர் என்றும் கூறப்பட்டது.

இதேவேளை -

கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள காவலரண் மீது நேற்று மாலை 5 மணியளவில் கிரனேட் வீசப்பட்டது. இதனையடுத்து படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர். கிரனேட் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா, இஸ்ரேலிடமிருந்து கடற்படைக்கு கனரக பீரங்கிகள்!

### கொள்வனவு செய்ய அரசு நடவடிக்கை

இலங்கை கடற்படைக்கு புதிதாக மேலும் பல கனரக பீரங்கிகள் மற்றும் ஆயுதங்களை அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளிலிருந்து கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

கடற்படைக்குரிய 'புஷ் மாஸ்ரர் 44' ரக பீரங்கிகளை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்கக் கடற்படையினருடன் கலந்துரையாடியுள்ளார்.

பீரங்கி கொள்வனவுக்காக அவர் இஸ்ரேலுக்கும் செல்லவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டோ தடம்புரண்டதில் சிக்குண்டு யுவதி மரணம்!

யாழ்ப்பாணம்,ஜூலை3

நவாலியில் நேற்று மாலை ஓட்டோ ஒன்று தடம்புரண்டதில் அதில் பயணித்த யுவதி ஒருவர் நசியுண்டு மரணமானார்.

யாழ்.நாவாந்துறையைச் சேர்ந்த அன்ரன் சுஜிந்தினி(வயது 24) என்ற யுவதியே இவ்வாறு மரணமானவர் ஆவார். நவாலிப் பகுதியில் நேற்று நடைபெற்ற பொது நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டுவிட்டு குறிப்பிட்ட யுவதியும் மற்றொரு பெண்ணும் ஓட்டோவில் வீடு நோக்கித் திரும்பிக்கொண்டிருந்தனர் என்றும் -

நவாலி மாதாங் கோயிலுக்குச் சமீபமாக சென்ற ஓட்டோ திடீரென வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டது என்றும் கூறப்பட்டது.

உயிரிழந்த யுவதியுடன் பயணித்த நாவாந்துறையைச் சேர்ந்த செல்வதாஸ் ஜெனட் ஹில்டா (வயது 36) என்பவரும் பலத்த காயங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள ஊடகவியலாளரின் சடலம் சூட்டுக்காயத்துடன் தெஹிவளையில்!

### *பாதுகாப்புத் துறையை விமர்சித்துப் பத்திகள் எழுதி வந்தவர்*



கொழும்பு,ஜூலை 03

'சத்தன' சிங்கள நாளேட்டின் முன்னாள் பாதுகாப்புத் துறை பத்தி எழுத்தாளரும், ஊடகவியலாளருமான லக்மல் சம்பத் நேற்று தெஹிவளையில் வைத்து அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கிரியந்தனையில் உள்ள அவரது வீட்டுக்கு வந்த நபர் ஒருவர் அவரை வெளியே அழைத்துச் சென்றார் என்றும் பின்னர் நேற்றுக் காலை தெஹிவளையில் உள்ள விஜயா வீதியில் சூட்டுக் காயத்துடன் அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

சிங்கள ஊடகத்துறையில் பிரபல பத்தி எழுத்தாளரான சம்பத் இராணுவப் புலனாய்வுத் துறையுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் மற்றும் இராணுவக் கட்டமைப்பின் பல்வேறு மட்டங்களிலும் இடம்பெற்ற லஞ்ச முறைகேடுகள் பற்றியும் தனது பத்திகளில் எழுதி வந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

லஞ்ச ஊழல் மோசடிகளுக்கும் பாதாள உலகக் கும்பல்களுக்கும் உள்ள தொடர்புகள், பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் எழுதி வந்தவர் சம்பத்.

இராணுவத்தின் புலனாய்வுத்துறை சம்பந்தமாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வுக் கழகப் பணியாளர் கருணா குழுவினரால் கடத்தல்!

### வாழைச்சேனையில் நேற்று சம்பவம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர் ஒருவர் நேற்றுக் காலை 10.30 மணியளவில், மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் வைத்து, கருணா குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக் கப்படுகின்றது. புனர்வாழ்வுக் கழகத்தின் வாகரை சிறுவர் பாதுகாப்புப் பிரிவில் ஆசிரியராகப் பணியாற்றும் கிருஷ்ணபிள்ளை கமலநாதன் என்பவரே இவ்வாறு கடத்தப்பட்டவராவார்.

நேற்றுக் காலை இவர் தமது மோட்டார் சைக்கிளில் வீதியால் சென்று கொண்டிருந்த சமயமே, கருணா குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டார் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.பி.டி.பியின் கேவலமான அரசியல் முடிவடையும் காலம் நெருங்கிவிட்டது

## யாழ். பொங்கியெழும் மக்கள் படை அறிக்கை

கொழும்பு,ஜூலை3

நிர்வாக ரீதியாக மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகளை தமது அதிகாரத்தைப் பயன்படுத்திய ஈ.பி.டி.பியினர் இன்று பொது மக்களை ஸ்ரீதர் தியேட்டருக்கு அழைத்து அவற்றைத் தாம் செய்து தருவதாகக் கூறி வருகின்றனர்.

இத்தகைய கேவலமான அரசியல் முடிவடையும் காலம் நெருங்கி வந்துவிட்டது.

இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ். மாவட்ட பொங்கி எழும் மக்கள் படை.

'அரசியல் என்னும் போர்வையில் அலுவலகம் புரிவோருக்கு' என்ற தலைப்பில் ஊடகங்களுக்கு விடுக்கப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு-

சிறிலங்காப் படைகளின் அதி உச்ச பாதுகாப்பின் மத்தியில் தமிழ் மக்களிற்கு சேவை செய்வதாகக் கூறிக்கொண்டு அராஜகம் புரிந்துவரும் ஈ.பி.டி.பி. செயலாளர் டக்ளஸும் அவரது பரிவாரங்களும் இனியும் திருந்தாவிட்டால் அதன் பலனை வெகு விரைவில் அனுபவிக்க நேரிடும் என்பதனை புரிந்துகொள்ளவேண்டும்.

சிறிலங்கா அமைச்சின் பெயரால் உதவிகள் புரிவதாக மக்களுக்கும், அரச அதிகாரிகளிற்கும் பெரும் சிரமங்களை உண்டு பண்ணி வரும் ஈ.பி.டி.பியினரின் அட்டகாசங்கள் ஏராளம். இதுபற்றி மக்களும் அரச அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் தமது வெறுப்பைத் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் ஸ்ரீதர் திரையரங்கிற்கு துப்பாக்கி முனையில் வற்புறுத்தலின் பெயரில் அழைக்கப்பட்ட அரச அதிகாரிகள் மிகக் கேவலமாக நடத்தப்பட்டமை. எமது பார்வைக்கும் கொண்டுவரப்பட்டுள்ளது. சாதாரணமாக நிர்வாக ரீதியாக மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகளை அதிகாரத்தை பயன்படுத்தி இடைநிறுத்திவிட்டு தனது ஸ்ரீதர் திரையரங்கிற்கு அழைத்து அதனை தான் செய்வதாக மக்களை ஏமாற்றி வரும் இவர்களின் கேவலமான அரசியல் முடிவடையும் காலம் நெருங்கிவிட்டது. வெகுவிரைவில் யாழ்.குடாநாடு எதிரியின் கையில் இருந்து மீட்கப்படும். எனவே சிங்களப் படைகளினதும் ஈ.பி.டி.பி. தேசவிரோதிகளினதும் பொய்மையான அரசியலை ஒதுக்கி அதற்கு துணை போகாது செயற்படுமாறும் குறிப்பிட்ட இடங் களுக்கு செல்வதனூடாக உங்களுக்கு ஏற்படும், ஏற்படப்போகும் அசெளகரியங்களைத் தவிர்த் துக்கொள்ளமுடியும் என்பதையும் யாழ். மாவட்ட பொங்கி எழும் மக்கள் படை கேட்டுக்கொள்கின்றது. - என்று அதிலுள்ளது.

# ஐ.தே.கட்சியின் 2 கூட்டங்கள் நாளை

கொழும்பு, ஜூலை3

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியமான இரண்டு கூட்டங்கள் நாளை நடைபெறுகின்றன. கட்சியின் செயற்குழுக்கூட்டமும் நாடாளுமன்றக் குழுக் கூட்டமுமே நாளை கட்சியின் தலைமையகத்தில் நடைபெற ஏற்பாடாகியிருக்கின்றன.

தற்போது ஜேர்மனிக்குச் சென்றிருக்கும் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாளை அதிகாலை நாடு திரும்புகிறார்.

நாளை மாலை இரு முக்கிய கூட்டங்களையும் தலைமை வகித்து நடத்துகிறார் ரணில்.

நாட்டில் பலத்த நெருக்கடியான நிலைமைகள் ஏற்பட்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் இந்தக் கூட்டங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

அரசியல் தொடர்பான பல முடிவுகள் இக்கூட்டங்களின்போது எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த)

# எரிபொருள் விநியோக ஒப்பந்தம்: தொழிற்சங்கங்கள் போர்க்கொடி!

## வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிக்க முஸ்தீபு

கொழும்பு,ஜூலை3

எரிபொருள் விநியோகம் தொடர்பாக இலங்கை அரசும் இந்திய ஒயில் கம்பனியும் (ஐ.ஓ.சி) செய்துகொள்ளவிருக்கும் உடன்படிக்கையைக் கண்டித்து இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கம் உட்பட பல தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து பாரிய வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தொழிற்சங்கம், இலங்கை மின்சாரசபை தொழிற்சங்கம், இலங்கை ரயில்வேதிணைக்கள ஊழியர்சங்கம், அரச போக்குவரத்து ஊழியர் சங்கம் ஆகிய தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளன.

இது தொடர்பாக ஜே.வி.பி. சார்பான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன பொதுச் சேவை ஊழியர் சங்கத்தின் செயலாளர் ஆனந்த லசஷ்மன் தெரிவித்ததாவது:-

எரிபொருள் விநியோகம் தொடர்பாக திறைசேரியும் இந்திய ஒயில் கம்பனியும் (ஐ.ஓ.சி) ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் எரி பொருள் விநியோகத்தில் பெரும் சிக்கலான ஒரு நிலையை ஏற்படுத்தும்.

இது தொடர்பாக எமக்கு அறிவிக்காமல் அரசு ஒப்பந்தத்தைச் செய்யமுன்வந்துள்ளது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அவ்வாறு ஒப்பந்தம் செய்துகொண்டால் நாம் பல தொழிற்சங்கங்களை ஒன்றுதிரட்டி வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிப்போம்.

# பொதுமக்களுக்கு அரசியல் விழிப்பூட்ட ஜே.வி.பியினர் புதனன்று மாநாடு

கொழும்பு,ஜூலை3

தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து பெதுமக்களுக்கு விழிப்பூட்டும் நோக்கில் ஜே.வி.பியினர் மாநாடு ஒன்றை நடத்தத் திட்ட மிட்டுள்ளனர்.

இம்மாநாட்டை நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு மாநகரசபை முன்றிலில் நடத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன என ஜே.வி.பியினர் தெரிவித்துள்ளனர்.

''தாய் நாட்டுக்கு எதிரான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுச் சக்திகளைத் தோற்கடிக்க மக்கள் சக்தியை ஒன்று திரட்டுவோம்'' என்ற தொனிப் பொருளின் கீழ் இம்மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இம்மாநாட்டுக்கு ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தலைமை வகிக்கவுள்ளார். கட்சியின் முக்கிய பிரமுகர்கள் பலரும் உரையாற்றவுள்ளனர்.

அதில் கலந்துகொள்ள 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களின் வருகை எதிர்பார்க்கப்படுவதாகவும் வெளி மாவட்டங்களில் இருந்து மக்களை அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன எனவும் அறிய வருகின்றது.

இம்மாநாட்டின் முடிவில் பல முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் மிகத் துரிதமாக அத்தீர்மானங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜே.வி.பி. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

# ஐ.தே.கட்சி திறந்த மனதுடன் முன்வருமானால் திருமண ஒப்பந்தம் செய்ய ஆளுங்கட்சி தயார்!

## *ஜனாதிபதியின் நாடாளுமன்ற விவகார ஆலோசகர் அஸ்வர் இப்படிச் சொல்கிறார்*

கொழும்பு,ஜூலை3

திறந்த மனதுடன் ஐக்கிய தேசியக் கட்சி முன்வந்தால் திருமண ஒப்பந்தம் செய்து கொள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசும், ஜனாதிபதியும் தயாராகவே இருக்கின்றனர். ஏற்கனவே, இருவரைத் திருமணம் செய்து கொண்டவர் முறைப்படி மேலும் இருவரைத் திருமணம் செய்து கொள்ள இடமுண்டு. இதற்கு ஏற்ப ஐக்கிய தேசியக் கட்சியினர் மனதைப் பக்குவப்படுத்திக் கொண்டு முன்வர வேண்டும்.

முன்னாள் அமைச்சரும், ஜனாதிபதியின் நாடாளுமன்ற விவகார ஆலோசகருமான அல்ஹாஜ் ஏ.எச். எம். அஸ்வர் இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் பொரளை நகரோதய மண்டபத்தில் இடம்பெற்ற முஸ்லிம் மீடியா போரத்தின் 11ஆவது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அஸ்வர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:-

''ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான டாக்டர் ராஜித்த சேனாரத்ன, தமது கட்சி அரசுடன் திருமண ஒப்பந்தம் செய்து கொள்ளத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார். இது வரவேற்கத் தக்கதே.

ஆனால், அரசாங்கம், ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய இரு கட்சிகளுடன் செய்து கொண்டுள்ள விவாகத்தை ரத்துச் செய்துவிட வேண்டும் என்று கூறுவதுதான் வேடிக்கையானது. முன்னாள் முஸ்லிம் விவகார அமைச்சர் என்ற வகையிலும், இஸ்லாமிய விவகாரங்கள் தொடர்பான மூத்த ஆலோசகர் என்ற வகையிலும் 'ஷரி ஆ' சட்டத்தின்படி ஏற்கனவே இரண்டு திருமணம் செய்து கொண்டவர் அவர்களை விவாகரத்துச் செய்யாமலே மேலும் இருவரைத் திருமணம் செய்து கொள்ள முடியும். ஆனால், உண்மையான அன்பும், திறந்த மனதும்தான் அவசியம்.

கள்ளக் காதலுக்கு இடம் இல்லை. அது கடற்கரையோரத்தில் குடையடிக் காதல் போன்று காற்றோடு மறைந்து போகும்.

ஐக்கிய தேசியக் கட்சி உண்மையாகவே நாட்டின் நலன் கருதி அரசுடன் இணைந்து செயல்பட விரும்பினால் அதனை வரவேற்கின்றோம். கெப்பிட்டிக்கொலாவை மனிதப் படுகொலைகளின் பின்னரும் இராணுவப் பிரதித் தளபதியின் அகால மரணத்தின் பின்னரும் சமாதானத்தின் கதவுகள் திறந்தே இருப்பதாக ஜனாதிபதி உணர்வுபூர்வமாகக் கூறியுள்ளார்.

எனவே, ஐக்கிய தேசியக் கட்சியினர் அறிக்கைகளையும், ஆலோசனைகளையும் தெரிவிப்பதை விடுத்து நேரடியாகத் தாமே முன்வந்து பேச வேண்டும். இவர்களுடன் உண்மையான பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ள ஜனாதிபதி தயாராகவே இருக்கின்றார்''

- என்று ஏ.எச். எம். அஸ்வர் கூறினார்.

# மூதூரில் 6ஆயிரம் மக்கள்கலந்துகொண்ட தற்காப்பு பயிற்சி வெள்ளியன்று நிறைவு

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியான மூதூரில் 6ஆயிரம் பொது மக்கள் தற்காப்புப் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர்.

இந்தத் தற்காப்புப் பயிற்சி நிறைவு நிகழ்வு கடந்த வெள்ளிகிழமை மூதூர் சிறி செண்பகா மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பங்கேற்ற திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன், தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் உரிமைகளை தென்னிலங்கை சிங்கள அரசு புறக்கணித்து வருகிறது. நாம் நமது தேசியத்தலைவரின் கீழ் நமது விடுதலைப் போராட்டத்தை முழுவீச்சுடன் முன்னெடுக்கவேண்டிய நிலையில் உள்ளோம் - என்றார்.

இலங்கை இனப்பிரச்சினையில் சர்வதேச சமூகத்தினது பாரபட்சமான அணுகுமுறையானது எமக்கு அதிருப்தி அளிக்கிறது. அவர்கள் தங்களது சொந்த நலன்களுக்காக செயற்படுகிறார்கள் - என்றும் எழிலன் கூறினார்.

இந்நிகழ்வில் இரு மாவீரர்களின் தந்தை பொதுச்சுடரேற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை திருமலைத் தளபதி வசந்தன் ஏற்றினார்.

விடுதலைப் புலிகளின் துணைத் தளபதி அறிவு, ஈகச்சுடரேற்றினார். திருமலை மாவட்ட முதல் மாவீரரான லெப். சீலனின் திருவுருவப் படத்துக்கு தளபதி தேவன் மலர் வணக்கம் செலுத்தினார்.

பயிற்சியின்போது போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டன. கலை நிகழ்வுகளும் நடத்தப்பட்டன.







மூதூரில் தற்காப்புப் பயிற்சிபெற்ற பொதுமக்களில் ஒரு பகுதியினரையும் பயிற்சி நிறைவு தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்படுவதையும் தளபதிகள் அகவணக்கம் செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# சர்வதேச ரீதியில் மீண்டும் வலை விரிப்பும் வியூக வகுப்பும்

இலங்கை இனப்பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட இரு பிரதான தரப்புகளாலும் அமைதி வழியில் - சமாதானப் பேச்சுக்கள் மூலம் - தீர்வுகாணும் விடயத்தில் பலம் பொருந்திய நாடுகளின் தனிப்பட்ட புவியியல், கேந்திர, அரசியல் அபிலாஷைகளும், கொள்கை நிலைப்பாடுகளும், அதிகார வீச்சுகளும் அளவுக்கு அதிகமாக தலையீடு செய்யும் ஆபத்து இருப்பது குறித்து இப்பத்தியில் ஏற்கனவே பலதடவை சுட்டிக் காட்டி வந்துள்ளோம்.

ரணிலின் முன்னைய ஐ.தே.கட்சி அரசு, தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அமைதி முயற்சிகளை ஆரம்பித்த காலத்திலேயே இத்தகைய தலையீடுகள் இருந்து வந்தமையை அனைவரும் அறிவர்.

உலக நாடுகளின் திரள்வான சர்வதேச சமூகம், அப்போதே அந்த சமாதான முயற்சிகளின்போது தீர்வுக்கான வரம்புகளை - வரையறைகளை - தமது விருப்புகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் இயைவாகத் திணிக்கத்துணிந்தமை எமது வரலாற்றுப் பட்டறிவு.

சர்வதேச சமூகத்தின் தலையீடு, நெருக்குவாரம் மூலம் புலிகளை அமுக்கிப் பிடிக்கும் தனது திட்டத்தையே ரணில் விக்கிரசிங்க தமது 'சர்வதேச பாதுகாப்பு வலையப்பின்னல்' என்ற சதியாக விரிக்க முயன்றார்.

தமது உரிமைகளை மீளப் பெறுவதற்கான தேடலில் - போராட்டத்தில் - முறையற்ற அந்நியர் தலையீடு, தமது அரசியல் தகைமையையும் தலைவிதியையும் தாமே தீர்மானிக்கும் சுயாதீன உரிமையைப் பாதிக்கிறது - பறிக்கிறது - என்ற மெய்மை நிலையை உய்த்துணர்ந்து கொண்ட தமிழர் தரப்பு - விடுதலைப்புலிகள் இயக்கம் - தமது தந்திரோபாயக் காய் நகர்த்தல்கள் மூலம் இந்தச் சதிவலைப் பின்னலில் சிக்குண்டு அவதியுறாமல் தம்மை சாமர்த்தியமாகத் தவிர்த்துக்கொண்டது. அது நடந்து முடிந்த கதை.

இப்போது தென்னிலங்கையில் ஒரு குழப்பமான - சிந்தனைத் தெளிவற்ற - கொள்கை நிலைப்பாட்டில் ஒருங்கிசைவற்ற - ஓர் ஆட்சிப்பீடம் அதிகாரத்துக்கு வந்துள்ள நிலையில் -

அதனைத் தமது இசைவுக்கு ஏற்ப வழிநடத்த முடியாமல் திணறும் சர்வதேச சமூகம், தமிழர் தரப்பையாவது நெருக்குவாரப்படுத்தித் தனது வழிக்குக் கொண்டுவர எதிர்பார்த்துத் தோற்றுப்போய் நிற்கிறது. இந்தப் பின்னணியில் தமிழர் தரப்புக்கு எதிராக மற்றொரு சர்வதேச சதிவலைப் பின்னல் இழைக்கப்படுகிறது என்ற முன்னெச்சரிக்கை அறிவிப்பை அம்பலப்படுத்துவதே இப்பத்தியின் இன்றைய நோக்கமாகும்.

தமிழர்களின் விடுதலைப் போராட்ட வீச்சை மடக்குவதற்கான வியூகத்தை ஐ.நா.மட்டத்தில் வகுக்கும் எத்தனங்கள் முளைவிடத் தொடங்கியிருக்கின்றன எனத் தெரிகின்றது.

அதன் ஒரு கட்டமாக ஐ.நா. செயலாளர் நாயகத்தின் சார்பில் அவரின் இரு தூதுவர்கள் விரைவில் கொழும்பு வருகின்றனர்.

யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியாக இலங்கையைச் சேர்ந்தவரான ராதிகா குமாரசுவாமி அம்மையார் உள்ளார். அவரின் சார்பில் உயர்மட்ட ஐ.நா. தூதுவராக அலன் றொக் என்பவர் கொழும்புக்கு வந்து இலங்கையில் யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பான ஆய்வறிக்கை ஒன்றைத் தயாரிக்க வுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி விரைவில் நேரடியாகக் கொழும்பு வரவிருக்கிறார் எனத் தெரிகின்றது. அவரும் இலங்கையில் - யுத்தப்பிரதேசத்தில் - மனித உரிமை மீறல்கள் பற்றிய நிலைவர அறிக்கையொன்றைத் தயாரிப்பார் எனத் தெரிகின்றது. குறிப்பாக சட்டத்துக்கு முரணான முறையில் இடம்பெறும் கொலைகள், அச்சுறுத்தல்கள், அடாவடித்தனங்கள் போன்றவை குறித்து ஒரு மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்பது அவரது திட்டமாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

இதேவேளை, இலங்கையில் உள்ள யுனிசெவ் போன்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் மூலமும் அறிக்கைகளைப் பெற்றுக் குவிக்கும் திட்டம் ஒன்றும் ஐ.நா. மட்டத்தில் இருப்பதாகத் தெரிகின்றது.

இத்தகைய அதிகாரிகள் அல்லது பிரதிநிதிகளின் மதிப்பீட்டு அறிக்கைகளை முன்னிலைப்படுத்தி, அவற்றை மையப்படுத்தி, அதன் வழியாக ஐ.நா.வின் தலையீட்டுக்கு கால்கோள் இடுவதற்கான திட்டங்கள் சில மட்டங்களில் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகின்றன என நம்பகரமாகத் தெரிகின்றது.

இந்த வலைவிரிப்பு, வியூக வகுப்பு போன்றவை குறித்து முன்னெச்சரிக்கையாக இருந்து, ரணிலின் கால சர்வதேச வலை விரிப்பை முறியடித்தமை போல இவற்றையும் செயலிழக்கச் செய்வதற்கான தந்திரோபாய நகர்வை தமிழர் தரப்பு இப்போதே ஆரம்பிப்பது அவசியமும், அவசரமுமாகின்றது.

வெறும் அறிக்கைகள், பேச்சுகள், வெளியீடுகள், பிரகடனங்கள் மூலம் இந்த வலைவிரிப்பை முறியடிக்க முடியாது. இவ்விடயத்தில் குற்றச்சாட்டுக் கணைகளை களத்தில் எதிர்கொண்டு, செயல் நடத்தைத் திறம் மூலம் அவற்றை முறியடித்து, முன் நகர்வதே புத்திசாலித்தனம். அதற்கு நம்மை நாமே தயார் செய்யும் காலமாக இது அமையட்டும்.

வடக்கு - கிழக்கு கல்வி வலயங்களுக்கு

# உலக வங்கி வழங்கிய நிதி பயன்படுத்தப்படாமல் தேக்கம்

அச்சுவேலி,ஜூலை3

கல்விசார் செயற்பாடுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் பெருமளவு நிதி வடக்கு - கிழக்கில் உள்ள கல்வி வலயங்களினால் பயன்படுத்தப்படாமல் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்வி அமைச்சினால் உலக வங்கி நிதி உதவி மூலம் வடக்கு - கிழக்கில் உள்ள 24 கல்வி வலயங்களுக்கும் இந்த வருடம் 103 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மே மாதம் வரை 5 மில்லியன் மட்டும் தான் செலவு செய்யப்பட்டுள்ளது என அறியப்படுகின்றது.

கல்வி வலய ரீதியாக பாடசாலைகளின் தொகை, வள நிலை, மாணவர் எண்ணிக்கை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு கல்வி வலயங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியைப் பயன்படுத்தி வருடம் முடிவதற்கு முன்னர் பொதுநிர்வாகம், ஆசிரியர் சேவைக்காலப் பயிற்சி, விசேட கல்வி, இயலுமை விருத்தி, மாணவர்கள் செயற்பாடுகள், முறைசாராக் கல்வி என்று ஆறு பிரதான தலைப்புகளின் கீழ் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய முறையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாமையினால் பெருமளவு நிதி வருட முடிவில் திருப்பிப் பெறப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐந்து மாத காலத்தில் 5 மில்லியன் நிதி மட்டும் பயன்படுத்தப்பட்டிருப்பின் எஞ்சியுள்ள 7 மாத காலத்தில் 93 மில்லியன் ரூபாவை உரியமுறையில் செலவுசெய்வதற்கு சந்தர்ப்பம் இல்லாமற் போய்விடும் என்றும் இந்த வருடம் பயன்படுத்தப்பட்ட நிதி அளவை அடிப்படையாக வைத்தே அடுத்த வருடத்திற்கான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (11)

# நவாலிப் படுகொலை நினைவு 9ஆம் திகதி அனுஷ்டிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை3

நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலயம் மீதான தாக்குதலின் பதினோராம் ஆண்டு நினைவுதினம் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் திகதி வலிகாமம் பகுதி மீதான தாக்குதல் இடம்பெற்றவேளையில் -

மக்கள் இடம்பெயர்ந்து சென்று கொண்டிருந்தபோது நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மற்றும் நவாலி சின்னக் கதிர்காம முருகன் ஆலயம் மீது இரண்டு விமானங்கள் தாக்குதல் நடத்தியிருந்தன.

இத் தாக்குதலில் 147 பேர் அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமாகினர். 320இற்கும் மேற்பட்டோர் கையிழந்து காலிழந்து படுகாயமடைந்தனர். இத் தாக்குதலில் 27 இற்கும் மேற்பட்ட வீடுகள் முற்றாக அழிந்திருந்தன.

நவாலியில் இடம்பெற்ற கோரத் தாக்குதலின் பதினோராம் ஆண்டு பூர்த்தியினை முன்னிட்டு நவாலி சின்னக் கதிர்காம முருகன் ஆலயத்திலும், நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலயத்திலும் விசேட பூஜை வழிபாடுகள் எதிர்வரும் 9ஆம் திகதி நடத்த ஏற்பாடாகியுள்ளன. (185)

# நல்லூர் உற்சவகாலத்தில் மக்கள் நடமாட்டம் குறித்து படையினருக்கு நிலைமையை விளக்கிக் கடிதம்

நல்லூர்,ஜூலை3

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ தினங்களில் ஆலய வீதிகளில் நடமாடுவது குறித்து படையினருக்கு கடிதம் மூலம் நிலைமையைத் தெளிவுபடுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பெருந்திருவிழா இம்மாதம் 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. திருவிழாக்காலத்தில் ஆலய சூழலில் மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் அண்மையில் நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்றது. யாழ்.மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் உற்சவ காலத்தின் போது படையினர் ஆலய வீதிகளில் நடமாடுவது குறித்து அவர்களுக்கு நிலைமையை விளக்கிக் கடிதம் அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

சுகாதார சேவை, மின்சாரசபை, மாநகரசபைப் பணிப்பிரிவுகள் ஆகியவற்றின் அதிகாரிகளும் தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்ற இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்துத் தெரிவிக்கப்பட்டதாவது:-

உற்சவகாலத்தையொட்டி போடப்படும் வீதித்தடைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் பிற்பகல் 6மணிமுதல் மறுநாள் காலை 6மணிவரை மின்சார வெளிச்சம் தொடர்ச்சியாக வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகளை மின்சாரசபை மேற்கொள்ளும். வீதித்தடைகள் அதிகாலை 4.30மணிக்கு ஆரம்பிக்கப்படும்.

ஆலயச்சூழலில் உள்ளவர்கள் தமது வாகனங்களை வீதித்தடைகளைத் தாண்டி எடுத்துச்செல்ல அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். இரண்டாம் தடைக்குள் இருப்பவர்களுக்கு விசேட அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். இதன் மூலம் ஏனைய வீதித்தடைகளுக்கு உட்பட்டவர்கள் ஆலயத்திற்கு சமீபமாக தமது வாகனங்களைக் கொண்டு செல்வது தடுக்கப்படும். வர்த்தகர்கள் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு உட்பிரவேசிப்பதற்கான அனுமதி அட்டைகள் வெவ்வேறு நிறங்களில் வழங்கப்படும். குடியிருப்பாளரின் குடும்ப அட்டையில் உள்ள விவரங்கள் குறித்துப் பார்வையிட்டே அனுமதி அட்டைகள் வழங்கப்படும்.

வீதித்தடைக்கு உட்பட்டவர்கள், வர்த்தகர்கள், அன்னதானம் வழங்கும் மண்டபங்களில் பணியில் உள்ளவர்கள் வீதித்தடை குறித்த நடைமுறைகளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டு எதிர்வரும் 27ஆம் திகதி முதல் 29ஆம் திகதிவரை மூன்று தினங்களுக்கு ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல் மேற்கொள்ளப்படும்.

ஆலயச்சூழலில் நடைபெறும் எந்த நிகழ்வும் திருவீதி உலாவும் ஆலய நிகழ்வுகளும் முடிவடைந்த பின்னரே ஆரம்பிக்கவேண்டும். ஆலயச்சூழலில் உள்ள வர்த்தக நிலையங்களில் சினிமாப்பாடல்கள் முற்றாகத் தடை செய்யப்படும்.

உற்சவ காலத்தில் பிரதட்டை செய்யும் பக்தர்களுக்கு வசதியாக ஆலயத்தைச் சுற்றிப் பரவுவதற்கென எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் ஒரே இடத்தில் மணல் குவிக்கப்பட்டு அங்கிருந்து தேவையேற்படும்போது பரவ நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. (111)

# இரண்டு மணிநேர மின்வெட்டால் நயினாதீவு தெற்கு மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூலை3

நயினாதீவு தெற்குப் பிரதேசத்தில் இரவு நேரங்களில் 2மணித்தியாலங்கள் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுவதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இது குறித்து நயினாதீவு ஸ்ரீ பிடாரி அம்பாள் சனசமூக நிலையம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஒரு மாதகாலமாக இரவு 7மணியிலிருந்து 9மணிவரை நயினாதீவு தெற்குப் பிரதேசத்திற்கு மின்சார விநியோகம் இடைநிறுத்தப்படுகின்றது. இது தொடர்பாக மின்சார சபையினிடம் கேட்டபோது மின்பிறப்பாக்கி அதிக வெப்பமடைவதால் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கமுடியாதுள்ளது எனத் தெரிவித்தனர்.

இம் மின்வெட்டால் பொதுவைத்தியசாலை, வர்த்தக நிலையங்கள், ஆலயங்கள் ஆகியவற்றின் பணிகளில் பெரும் சிரமம் ஏற்படுவதுடன் மின்சாரப் பாவனையாளர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தைக் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பிரதேச மக்களின் சார்பில் கேட்டுக்கெள்கின்றோம்- என்றுள்ளது. (202)

**நாளை**

**ஆனி - 20**
**செவ்வாய்க்கிழமை**
**04.07.2006**
**திதி : அட்டமி**
**முற்பகல்: 09.18**
**நட்சத்திரம் : அத்தம்**
**காலை : 08.12**
**சுபநேரம்: 10.27 - 11.57**
**ராகுகாலம்: 02.57 - 04.27**

# தென்மராட்சிப் பாடசாலைகளில் சிறுவர் உரிமைக் கருத்தரங்குகள்

தென்மராட்சி,ஜூலை3

அறவழிப்போராட்டக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் பாடசாலைகளில் நடத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் நுணாவில் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.

அறவழி நிலைய இயக்குநர் எம். கே.ஜீவகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவைச் சேர்ந்த எஸ்.ஜெனிபட், கிராம அலுவலர் வை. துரைசிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர் நலன்களைப் பாதுகாக்கும் செயற்றிட்டத்தினை அறவழிப் போராட்டக் குழுவினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் பத்துக் கிராமங்களில் மேற்கொள்ளவுள்ளனர்.

நாவற்குழி மேற்கு, மட்டுவில் கிழக்கு, கைதடி நுணாவில், கெற்பேலி, விடத்தற்பளை, தாவளை - இயற்றாலை, தவசிகுளம், மந்துவில் கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இக்கருத்தரங்குகள் விரைவில் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இக்கிராமங்களில் சிறுவர் கழகங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (117)

**உதயவாக்கு**

**வாழ்வு என்னும் ஆடையிலே எப்பொழுதும் இருவகை நூல் இணைந்திருக்கிறது. ஒன்று தீமை - மற்றொன்று நன்மை.**

*- ஷேக்ஸ்பியர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1972 ஆம் ஆண்டு, 1இல் செவ்வாய், சூரியன், கிரகபாவம் 39, அத்த நட்சத்திரம் உடைய பட்டதாரி, **(B.A.)** ஆசிரியைக்குத் தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: **T.P.:** 0777286009 (51816)

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1975 ஆம் ஆண்டு, அனுசம், 2ஆம் பாதம் மொத்த கிரகபாவம் 73 ¼ உடைய மணப் பெண்ணிற்கு மண்மகன் தேவை. தொடர்பு: 0713054689. **matrim jaffna @ yahoo.com** அல்லது விளம்பர இல.2904, மே/பா உதயன். (51810)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 28 வயது, திருவாதிரை நட்சத்திரம், கிரக பாவம் 7, அரச திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றுபவருக்கு உத்தியோகத்தில் உள்ள அழகிய மணமகள் தேவை. முழு விவரங்களுடன் உடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல.2905, மே/பா உதயன். (51814)

## தவறிவிட்டது

சோமாஸ்கந்த ஐயர் சண்முகானந்த சர்மா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (732874321V) சங்கரத்தைச் சந்திக்கும் நவாலிச்சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அடைக்கலந்தோட்டம் கந்தசாமி கோயில் அருகில், மாவடி - வட்டுக்கோட்டை என்ற முகவரியில் ஒப்படைத்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (51812)

பாலசுப்பிரமணியம் மஞ்சுளாதேவி என்பவரது தே.அ.அ. (இல.806124630V) அடங்கிய பேர்ஸ் கச்சேரி கிழக்கு ஒழுங்கைக்கும் பரமேஸ்வராச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அன்னக்கிளி பல்பொருள் அழகுமாடம், கச்சேரி **or** அன்னக்கிளி பல்பொருள் அழகு மாடம், பரமேஸ்வராச் சந்தி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (51838)

## வீடு வாடகைக்கு

கொக்குவில் மேற்கு ஆறுகால்மடம், பழம் வீதியில் இரண்டு அல்லது மூன்று பெண்கள் தங்குவதற்குக் குறைந்த வாடகையில் பகுதி வீடு உண்டு. தொடர்பு: விளம்பர இல. 2906. மே/பா உதயன். (51821)

யாழ்ப்பாணம், கச்சேரியடிக்கு அண்மையில் நல்லதண்ணீருடன் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும். காலை 9 மணிக்கு முன் தொடர்புகொள்ளவும். **T.P.:** 222 7861 (51808)

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தியில் கடை வாடகைக்குண்டு.
தொடர்பு: 0776736913 (51841)

## உள்ளூராட்சித் திணைக்கள 2ஆம் மாடி வேலைகள் துரிதம்

யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக இரண்டாவது மாடிக் கட்டட வேலைகள் துரிதகதியில் இடம்பெறுகின்றன.

விரைவில் இரண்டாவது மாடிக் கட்டடத் திறப்புவிழா இடம்பெறும். 'நீர்ப்' நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்படி அபிவிருத்தி வேலைகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (185)

## சமய சந்நிதிகளில்

தென்மராட்சி,ஜூலை3

சாவகச்சேரி கச்சாய் வீதி உளுத்தம்புலம் விநாயகர் ஆலயப் பொங்கல் உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை இரவு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பிற்பகல் 3 மணிக்கு விசேட, அபிஷேகம் நடைபெறும். (117)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை3

பருத்தித்துறை, தும்பளை மேற்கு வரத விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது. (203-117)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி செல்வமதி பாலசிங்கம்



பாசப்பிரிவுகளும் நேசநெகிழ்வுகளும் நெஞ்சமெங்கும் நிறைந்திருக்க
பெற்ற மனம் பதைபதைக்க உன் கணவன் உருகி நிற்க
பிள்ளைகள் அழுது புரள முகம் காண அக்கா துடிதுடிக்க
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டீரே!
மதியே! நீர் என்றும் எம் நெஞ்சில் ஜீவ நதியே
மலர்த்தி உன் முகம் என்றும் எம் நெஞ்சில் அழியா நந்தவனமே.

543/1. இராஜசிங்க வீதி.
வெவெள்ளவத்தை.
(0112362565)

உன் பிரிவால் உருகி நிற்கும்:
அக்கா (ராசாத்தி),
பெறாமகன் (அம்மன்).

(சி/49933)(24-17-11)

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



### திருமதி நல்லதம்பி புனிதவதி

இதய தெய்வமே! அன்பின் திருவுருவமே!
ஆண்டுகள் எட்டு சென்றாலும்
ஆறிடுமோ எம் துயரம்
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மானிப்பாய் வீதி, உரும்பிராய். - குடும்பத்தினர்.

(51840) (24-11-17)

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றிய

**தம்பிராசா விஜியபாலசிங்கம்**

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

காணிப்பதிவகம், யாழ். செயலகம்.

காணி மேலதிக மாவட்ட பதிவாளரும் அலுவலர்களும்.

(சி/49933)(24-11-17)

## நடமாடும் சேவை இடம்பெறவில்லை

தீவகப் பகுதி மக்களுக்காக திட்டமிடப்பட்டிருந்த மக்கள் நடமாடும் சேவை நேற்று இடம்பெறவில்லை. வேலணை மத்திய கல்லூரியில் மக்கள் நடமாடும் சேவை மேற்கொள்ள யாழ். செயலகம் ஒழுங்குசெய்திருந்தது.

முன்னறிவித்தல் கொடுக்கப்படாததால் யாழ். செயலக துறைசார் அதிகாரிகள், பிரதேச சபை அதிகாரிகள், பிரதேச செயலக மற்றும் நீர் வழங்கல் மின்சாரத்துறை அதிகாரிகள் தீவகம் சென்று மீளத்திரும்பினர். (185)

## தேவை

ஐஸ்கிறீம் தொழில் தெரிந்தவர்கள் தேவை.

தொடர்பு:
**சிவா**
இராமலிங்கம் வீதி, முடமாவடி,
திருநெல்வேலி கிழக்கு.

(51842) (24)

## மரண அறிவித்தல்

### தம்பையா கணபதிப்பிள்ளை



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கணபதிப்பிள்ளை 30.06.2006 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் சற்குணதேவியின் அன்புக் கணவரும் சிவசொரூபி (ஜேர்மனி), சாந்தசொரூபி (ஜேர்மனி), பிறேமசொரூபி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கதிரவேலு - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், இரத்தினம் மற்றும் சதாசிவம் பாக்கியம், தம்பித்துரை, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற முருகேசு, அன்னம்மா மற்றும் பத்மாவதி, தருமலிங்கம், சுசீலாதேவி, குணவதி, விமலாதேவி, காலஞ்சென்ற சறோஜினிதேவி ஆகியோரின் மைத்துனரும் உதயசிறீமார் (ஜேர்மனி), நவரத்தினம் (ஜேர்மனி), நடேசு ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2006) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(51828) (33-11-17-24)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



### அமரர் ஆறுமுகம் சண்முகநாதன்

*(இருபாலை)*

| தாய்மடியில் | மண்மடியில் |
|---|---|
| 06-10-1936 | 05-06-2006 |

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை, சபிண்டீகரணம் இன்று திங்கட்கிழமை நடைபெறும். நாளை மறுதினம் (05.07.2006) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கடலரசன் வீதி,*
*றெட்பானா, விசுவமடு.*

\- குடும்பத்தினர்.

(சி/49935)(32-11-17-24)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 06 - 08 - 1920 | 04 - 06 - 2006 |



### திருமதி சரஸ்வதி குமாரசாமி

எமது குடும்பத்தின் உயர்வுக்காய் உழைத்து எமது வாழ்வை வளம்படுத்திய குடும்பத்தலைவி சுகவீனமுற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அவரது நலன்களைக் கவனித்த வைத்திய அதிகாரிகள், ஏனைய உத்தியோகத்தர்களுக்கும், அவரது மரணச்செய்தி அறிந்து வருகைதந்து எமது துயரில் கலந்துகொண்ட கல்விப்பணிப் பாளர்கள், இலங்கை வங்கி உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மலர்வளையம், மலர்மாலைகளைச் சமர்ப்பித்த அன்பு உள்ளங்களிற்கும் உற்றார், உறவினர், நண்பர்களிற்கும் எமது மன மார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*'கமல வாசா',*
ஆனைக்கோட்டை.

(51836) (32-11-17-24)

\- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை தங்கம்மா



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தங்கம்மா நேற்றுமுன்தினம் (01.07.2006) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் இளையப்பு கதிராசிப்பிள்ளையின் புதல்வியும் செல்லத்துரையின் அன்பு மனைவியும் ஞானப்பிரகாசம் இளையபிள்ளையின் மருமகளும் சுசிலாதேவியின் பாசமிகு தாயும் துரையப்பா (கனடா) அவர்களின் மாமியும் மிஞ்சயன் (கனடா), தனஞ்சயன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் இலட்சுமியம்மாவின் மைத்துனியும் காலஞ்சென்ற நல்லம்மா, இலட்சுமியம்மா, செல்லம்மா மற்றும் வள்ளிப்பிள்ளை, முத்துவேலு, முத்தம்மா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிறுப்பிட்டி மேற்கு சிவப்பிரகாசம் தண்டிகைப் பிள்ளையின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.07.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி சீயாக்கடவை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(51835) (33-11-17-24)


தகவல்:
**துரையப்பா சுசிலாதேவி** (மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிரான்ஸின் ஹென்றி பிரமாதம்! பிரேசிலின் ஆட்சி முடிந்தது!!

உலகக்கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் இருந்து பிறேசில் வெளியேறி விட்டது. நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதியில் நடப்புச் சம்பியனாக வந்த பிறேசிலை புரட்டி எடுத்தது பிரான்ஸ். தியரி ஹென்றி




அற்புத கோல் அடிக்க, பிரான்ஸ் அணி பிறேசிலை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது. அரையிறுதியில் பிரான்ஸ், போர்த்துக்கலை எதிர்த்தாடவுள்ளது.

பிராங்போர்ட்டில் நடந்த பரபரப்பான காலிறுதியில் ஐந்து முறை சம்பியனான பிறேசில் அணியை, பிரான்ஸ் அணிஎதிர்த்தாடினார். விசில் ஊதிய முதல் நிமிடத்தில் இருந்து பிரான்ஸ் அணி மிரட்டியது. அதிலும் அணித்தலைவர் ஜிடேன் பிரமாதமாக ஆடினார்.


இவர் பந்தை அழகாக நகர்த்தி அப்படியே தொடையில் வாங்கி, தலையால் முட்டி, மின்னல் வேகத்தில் தட்டிச் சென்று பிறேசிலுக்கு தண்ணி காட்டினார். இவரது அசத்தல் ஆட்டத்திற்கு முன் பிறேசிலின் றொனால்டோ எல்லாம் காணாமல் போனார்.

பிரான்ஸின் எழுச்சியால் முரட்டு ஆட்டத்துக்கு மாறிய பிறேசில்அணித்தலைவர் கபு மற்றும் லூாசியோ மஞ்சள் அட்டை பெற்றனர். முதல் பாதி முடியும் நேரத்தில் பிரான்ஸ் அடுத்தடுத்து தாக்குதல் நடத்தியது. பந்தை மின்னல் வேகத்தில் கொண்டு சென்ற இந்த அணியின் பாட்ரிக் வியர்ராவை, பிறேசிலின் ஜூவான் பெனால்டி பகுதிக்கு மிக அருகில் முரட்டுத்தனமாக மடக்கினார். இதற்காக சிவப்பு அட்டை காட்டப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், ஸ்பெயின் நடுவர் லூயிஸ் மதினா மஞ்சள் அட்டை காட்டினார். அத்தோடு பிரான்ஸிற்கு தடையற்ற உதை வாய்ப்புக் கொடுத்தார். தியரி ஹென்றி அடித்த பந்து ரொனால்டோவின் கையில் பட்டுச் செல்ல, பிரான்ஸிற்கு மீண்டும் தடையற்ற உதை வாய்ப்புக் கிடைத்தது. அத்தோடு றொனால்டோவுக்கு மஞ்சள் அட்டை எச்சரிக்கை கிடைத்தது. இம்முறை ஜிடேன் அடித்த பந்தை ஒருவழியாக பிறேசில் வீரர்கள் தடுத்தனர். இத்தோடு முதல் பாதி முடிந்ததற்கான விசில் ஊதப்பட்டது. அப்பாடா...! தப்பித்தோம் என்ற உணர்வுடன் பிறேசில் வீரர்கள் வெளியேற, முதல் பாதி கோல் இல்லாமல் முடிந்தது.

இரண்டாவது பாதியிலும் பிரான்ஸ் ஆதிக்கம் தான் கூடுதலாக இருந்தது. 53ஆவது நிமிடத்தில் ஹென்றி அடித்த பந்து கோல் கம்பத்துக்குள் புகுந்தது. ஆனால் அது முறையற்றதென அறிவிக்க வாய்ப்பு நழுவியது. 57வது நிமிடத்தில் பிரான்ஸின் வெற்றிக்கான அடித்தளம் இடப்பட்டது. பிரான்ஸிற்க்கு தடையற்ற உதை வாய்ப்பை அடிக்கிறார் ஜிடேன். நல்ல உயரத்தில் பறந்து வந்த பந்து கோல் கம்பத்தை நெருங்க, அப்படியே வலது காலால் தியரி ஹென்றி தட்டி விட, பந்து வலைக்குள் புகுந்தது. பிரான்ஸ் வீரர்கள் வெற்றி கொண்டாட்டம் போட்டனர். கோல் வாங்கிய அதிர்ச்சியில் பிறேசில் வீரர்கள் உறைந்து போயினர். ஹென்றியின் கோல் மூலம் முன்னிலை (1-0) பெற்ற பிரான்ஸ் தாக்குதலைத் தொடர்ந்தது.

மறுபக்கம் பிறேசில் முன்கள வீரர்கள் ஏமாற்றினர். றொனால்டோவைப் பார்ப்பதே அரிதாக இருந்தது. 62ஆவது நிமிடத்தில் இன்னொரு முன்கள வீரரான ஆட்ரியோனோ களமிறக்கப்பட்டார். இவர் வந்தும் பிறேசில் ஆட்டத்தில் முன்னேற்றம் ஏற்படவில்லை. 75ஆவது நிமிடத்தில் பிறேசில் அணியில் இன்னொரு மாற்றம் இடம்பெற்றது. இம்முறை அணித்தலைவர் கபு வெளியேற, சின்சின்ஹோ உள்ளே வந்தார். அணித்தலைவர்பொறுப்பை கோல் காப்பாளர் திடா ஏற்றார். 78ஆவது நிமிடத்தில் ஹாக்காவுக்கு பதிலாக இளம் ராபின்ஹோ உள்ளே வந்தார். இந்த மாற்றங்கள் எல்லாம் பிறேசிலுக்கு கைகொடுக்கவில்லை. கடைசி நிமிடத்தில் றொனால்டோ மேற்கொண்ட முயற்சிகளும் பலன் அளிக்கவில்லை. இறுதியில் பிரான்ஸ் அணி பிரேசிலை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி




அரையிறுதிக்கு முன்னேறியது. நடப்பு சம்பியனாக வந்த பிரேசில் அதிர்ச்சி தோல்வியுடன் வெளியேறியது.

### எல்லாம் ஐரோப்பிய நாடுகள்

உலகக்கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் தென் அமெரிக்காவின் பிறேசில் வெளியேறியதை அடுத்து அரையிறுதியில் ஐரோப்பாவின் நான்கு அணிகள் மோதுகின்றன. ஜேர்மனி, இத்தாலி, போர்த்துக்கல், பிரான்ஸ் என எல்லாமே ஐரோப்பிய மயமாக உள்ளது. ஆக, இம்முறை உலகக்கிண்ணம் ஐரோப்பாவில் தஞ்சம் அடையப் போகிறது!

## இங்கிலாந்தும் 'அவுட்'

உலகக்கிண்ண கால்பந்தாட்ட அரையிறுதிக்கு போர்த்துக்கல் பிரமாதமாக முன்னேறியது. 'சமனிலை உடைப்பு உதை' மூலம் போர்த்துக்கல் அணி, இங்கிலாந்தை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. இங்கிலாந்து தொடரில் இருந்து பரிதாபகரமாக வெளியேறியது.



நேற்றுமுன்தினம் கெல்சன்கிர்சனில் நடந்த விறுவிறுப்பான காலிறுதியில் இங்கிலாந்து, போர்த்துக்கல் அணிகள் மோதின. ஆரம்பத்தில் இங்கிலாந்து துடிப்பாக ஆடியது. ஆட்டத்தின் 9ஆவது நிமிடத்தி இந்த அணியின் பிராங்க் லாம்பர்ட் கொடுத்த பநதைப் பெற்ற வெய்னி ரூனி அப்படியே 20 மீற்றர் தூரத்தில் இருந்து பந்தை உதைக்க, அதைப் போர்த்துக்கல் கோல்காப்பாளர் ரிக்கார்டோ பாய்ந்து பிடிக்க, வாய்ப்பு வீணானது. அடுத்த நிமிடம் லாம்பார்ட் கொண்டு வந்த பந்தைக் கைப்பற்றிய போர்த்துக்கலின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, இங்கிலாந்தின் பெனால்டிப் பகுதிக்குள் அசுர வேகத்தில் புகுந்து பந்தை அடித்தார். இம்முறை இங்கிலாந்து கோல்காப்பாளர் போல் ராபின்சன் கையில் பந்து புகுந்ததனால் வாய்ப்பு நழுவியது.

13ஆவது நிமிடத்தில் போர்த்துக்கலுக்கு இன்னொரு வாய்ப்புக் கிடைத்தது. கோல்கம்பத்தில் இருந்து 6 மீற்றர் துாரத்தில் கிடைத்த அரிய வாய்ப்பை டியாகோ நழுவவிட்டார். பின்னர் போர்த்துக்கல் அணித்தலைவர் பிகோ மற்றும் கிறிஸ்டியனோ றொனால்டோ கூட்டணி மிரட்டியது. முதல் பாதி முடிய 5 நிமிடம் இருக்கும் போது பிகோ அடித்த பந்தும் நூலிழையில் நழுவியது. மறுபக்கம் இங்கிலாந்தின் லாம்பார்ட் தனது அணிக்காக முயன்று கொண்டிருந்தார்.ஆனாலும் கோல் தான் விழவில்லை. முதல் பாதியில் இரு அணிகளுமே தற்காப்பு ஆட்டம் ஆடின. அதிலும் இங்கிலாந்து அணியில் ஐந்து வீரர்கள் மையப்பகுதியில் வட்டம் அடிக்க, ஒருவர் மட்டுமே தாக்குதல் நடத்தினார். இறுதியில் மந்தமான முதல் பாதி கோல் எதுவும் அடிக்கப்படாமல் முடிந்தது.

இரண்டாவது பாதியில் இங்கிலாந்துக்கு அடி மேல் அடி விழுந்தது. 47ஆவது நிமிடத்தில் போர்த்துக்கலின் நியுனோ வாலன்டோ மோதிக் கொள்ள, அணித்தலைவர் பெக்காம் வலது கணுக்கால் வலியால் துடித்தார். இதையடுத்து 52ஆவது நிமிடத்தில் பெக்காமுக்கு பதிலாக லெனான் களமிறக்கப்பட்டார். மைதானத்துக்கு வெளியே சென்ற பெக்காம் இருக்கையில் அமர்ந்தவாறு வலியால் அழுததைப் பார்க்க முடிந்தது. தொடர்ந்து 62ஆவது நிமிடத்தில் நட்சத்திர வீரரான வெய்னி ரூனி, போர்த்துக்கலின் ரிக்கார்டா கார்வல்கோ மீது மோதி, கீழே விழுந்து, உருண்டு எழுந்தார். அப்போது அவரது பூட்ஸ் கால் ரிக்கார்டோவைத் தாக்கியது. இந்த நேரத்தில் அங்கு ஓடி வந்து வாதம் செய்த கிறிஸ்டியனோ றொனால்டோவை சட்டையைப் பிடித்து தள்ளி மறித்தார் ரூனி. இதை எல்லாம் பார்த்த ஆர்ஜென்ரீனா நடுவர் ஹோரேஷியோ எலிசோண்டோ சட்டைப்பையில் இருந்து சட்டென சிவப்பு அட்டையை எடுத்துக் காட்டி ரூனியை வெளியேற்றினார். இதையடுத்து இங்கிலாந்து 10 பேருடன் விளையாட வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டது. பெக்காம் வேறு இல்லாதது போர்த்துக்கலுக்கு சாதகமானது. இந்த அரிய வாய்ப்பை போர்த்துக்கல் பயன்படுத்திக் கொள்ளத் தவறியது. இரண்டாவது பாதியும் கோல் அடிக்கப்படாமல் முடிய, ஆட்டம் கூடுதல் நேரத்துக்கு சென்றது.

இப்போதும் இரு அணிகளுமே கோல்கம்பத்தைத் தொட்டு வந்தன. இங்கிலாந்தின் பீற்றர் கிரவுச் தடையற்ற உடை வாய்ப்பை வீணடித்தார். முதல் பாதி கூடுதல் நேரத்திலும் கோல் அடிக்கப்படாததால் ஆட்டம் இரண்டாவது கூடுதல் நேரத்துக்கு சென்றது. இம்முறை போர்த்துக்கலின் போஸ்டிகா பந்தை வலைக்குள் தள்ளினார். ஆனால் அது முறையற்றது என அறிவிக்கப்பட ரசிகர்களின் கரகோஷம் அப்படியே அடங்கியது.

இரண்டாவது கூடுதல் நேரத்திலும் கோல் விழாததால், முடிவு 'சமனிலை உடைப்பு உதை' மூலம் தீர்மானிக்கப்பட்டது. இப்போது வெற்றி கோல்காப்பாளரின் திறமையைப் பொறுத்தே இருந்தது. அதிர்ஷ்டமும் வேண்டும் என்பதால் பதற்றம் எகிறியது. இதில் இங்கிலாந்து வீரர்கள் சொதப்பினர். அதே நேரத்தில் போர்த்துக்கல் கோல்பாக்காளர் ரிக்கார்டோ துடிப்பாக தடுத்து பாராட்டுப் பெற்றார். இறுதியில் போர்த்துக்கல் அணி இங்கிலாந்தை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது. 'சமனிலை உடைப்பு உதை' வாய்ப்பில் போர்த்துக்கல் சார்பில் சிமாவோ, போஸ்டிகோ, கிறிஸ்டியானோ றொனால்டோ கோல் அடித்தனர். இங்கிலாந்து தரப்பில் ஹார்கிரேவ்ஸ் மட்டுமே கோல் அடித்தார். மற்ற வீரர்கள் வாய்ப்புகளைக் கோட்டை விட இங்கிலாந்து கனத்த இதயத்துடன் தொடரில் இருந்து வெளியேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் மண்ணிலிருந்து எதிரிகளை விரட்ட கரும்புலிகள் தினத்தில் சபதமேற்போம்!

## யாழ். மாவட்டத் தமிழ் மாணவர் ஒன்றியம் அறைகூவல்

யாழ்ப்பாணம்,ஜூலை3

எம் மண்ணிலிருந்து எதிரிகளை விரட்ட கரும்புலிகள் தினத்தில் சபதமெடுப்போமென யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் அறைகூவல் விடுத்துள்ளது.

ஜூலை மாதம் ஐந்தாம் திகதியைத் தமிழீழ விடுதலைப் புலிகள் கரும்புலிகள் தினமாகப் பிரகடனப்படுத்தி அனுஷ்டித்தும் வருகின்றனர்.

எதிர்வரும் புதன்கிழமை கரும்புலிகள் நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அதையொட்டி தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தாய்மண் விடிவிற்காக உயிர்நீத்த கரும்புலி மறவர்களை எதிர்வரும் கரும்புலி நாளில் நினைவுகூரக் கடமையுடையோம். 1987ஆம் ஆண்டு கரும்புலி மில்லர் அவர்களால் ஆரம்பிக்கபட்ட கரும்புலிகளின் வேள்வி இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

தமிழினத்தின் தற்காப்புக் கவசங்களாகத் திகழ்ந்து தாய்மண் விடிவிற்காய் வெடிசுமந்து காற்றோடு காற்றாக, கடலோடு கடலாக, மண்ணோடு மண்ணாகக் கலந்த கரும்புலி மாவீரர்கள் தமிழ் மக்களால் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

வெற்றியின் இரகசியங்கள், வலிய சமர்களின் வலிமைகள், புலிப்படையின் புயல்கள், புனிதர்கள் எமது கரும்புலிகள். எதிரிகளால் எம் தேசமே எரிந்தபோது களம் புகுந்தவர்கள் கரும்புலி வீரர்கள்.

தானுண்டு தன் குடும்பமுண்டு என்று வாழும் நம்மவரிடத்தில் இருந்து தானைத் தலைவன் வழியில் சென்று தன்மானத்தின் சிகரங்களாகத் தம்மை மாய்ப்பவர்களின் தியாகங்கள் சொல்லுதற்கரியவையாகும்.

இத்தகைய தியாகத்தின் சிகரங்களைத் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் தலைவணங்கி நினைவுகூருவோம். அத்தோடு காலத்தின் தேவையாகவுள்ள விடுதலையின் உயரிய வீச்சைப் பெற்று எதிரிகளை எம் மண்ணைவிட்டு விரட்டுவோமெனச் சபதம் எடுப்போமாக - என்று அதில் உள்ளது.

# பயிற்றங்கொடியில் நோய்த்தாக்கம்

தென்மராட்சிகிழக்கு,ஜூலை3

வரணிப் பிரதேசத்தில் பயிற்றங்கொடிகள் ஒருவித வெளிறல் நோய்க்குள்ளாகியுள்ளது. வரணி, இடைக்குறிச்சி மாசேரிப் பகுதியில் பயிற்றங்கொடி பயிரிட்டவர்களே இவ்வாறு பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இதனால் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் கிடைக்காது போகும் நிலை உள்ளாகியுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். இப்படி பயிரிட்ட பயிர்கள் வளர்ச்சி குன்றியும் வெளிறல் நோய்க்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(122)


## 8ம் ஆண்டு நினைவு



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 07 | 03 |
| 09 | 07 |
| 1975 | 1998 |

**இரவீந்திரன் இந்திரகுமார் (அப்பன்)**

திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.

பட்டாம் பூச்சியைப்போல்
எம்மோடு பறந்துவிட்டு
பாதியிலே விட்டுச் சென்ற
இந்திரன் - இன்று நீ எங்கே
நிரந்தர மென்று எதுவுமில்லை என்று
நொடிப் பொழுதில் சொல்லிவிட்டு
நீயோ சென்று விட்டாய்?
எங்கு சென்றாலும்
உன் அன்புக்குரல் ஒலிக்கும்
எம் உள்ளம் வரை
மொட்டாக இருந்த நீ பூவாகி
மலருமுன் சருகாகி விட்டாயே!..
இது இறைவனின் சதியா?
அல்லது உன்விதியா?
மீண்டும் எம்மிடம் வந்து விடு.

தகவல்
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 - 06 - 1922 | 04 - 06 - 2006 |

**அமரர் மாரிமுத்து செந்திவேல்**

கடந்த 04.06.2006 அன்று இறைபதம் அடைந்த மாரிமுத்து செந்திவேல் அவர்களின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் அந்தியேட்டிக் கிரியைகளும் நாளை (04.07.2006) செவ்வாய்க் கிழமை இவரது உறவினர் வீட்டில் (கஜேந்திரன் இல்லத்தில்) நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

A.G.A. லேன்,
நெடியகாடு, வல்வெட்டித்துறை. - குடும்பத்தினர்.
(51701)(32.11.14.26)

## ஆச்சார்ய அபிஷேக அழைப்பு

நிகழும் சுபமங்களகரமான விய வருஷம் ஆனித்திங்கள் 19ஆம் நாள் 03-07-2006 திங்கட்கிழமை அத்த நட்சத்திரமும் ஸப்தமி திதியும் சித்தயோகமும் கூடிய 5.57 மணி முதல் 6.47 மணிவரையுள்ள மிதுன லக்கின சுபவேளையில் ஏழாலை மேற்கு திருவருள்மிகு கருணாகரப்பிள்ளையார் மடாலய மண்டபத்தில்

சிவஸ்ரீ சோ.பாலசுப்பிரமணியக்குருக்கள் - இராசாத்தி அம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன்

சிவத்திரு பாலமனோன் ஐயா அவர்களுக்கு நிர்வாண தீசையும், ஆச்சார்யா அபிஷேகமும், சிவபூசையும் இடம்பெற திருவருள் கூடியுள்ளது.

**தீக்ஷாகுரு**

சிவாகம கிரியாகலாநிதி, அருள்ஞானகிரியாமணி
சிவாகம தத்துவநிதி, கிரியா கிரமஜோதி
சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ணக்குருக்கள்
(பிரதமகுரு, மனோன்மணி அம்பாள் திருக்கோயில், உடுப்பிட்டி வடக்கு கொம்மாந்துறை)

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து அருளாசி பெறுவதுடன், தொடர்ந்து நடைபெறும் திருவமுது உபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

வரவேற்பாளர்கள்
பா.உருத்திரபாலன் ஐயா தம்பதியினர்,
இ.சத்தியலிங்கக்குருக்கள் தம்பதியினர்.

சிவஸ்ரீ சோ.பாலசுப்பிரமணியக்குருக்கள் தம்பதியினர்.

(51707) (26.11.14)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



திருமதி
**ஐயாத்துரை கண்மணி**

அன்னை மடியில் 01-08-1922 ஆண்டவன் அடியில் 01-06-2006

எமது அம்மாவின் பிரிவின் போது எம்மோடு நின்று உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகள்.

இன்று (03.07.2006) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

நீர்வேலி மேற்கு,
நீர்வேலி. (51815)(24.11.14.26) - பேரப்பிள்ளைகள்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

792 சிவப்பு

இடபம்

30-06-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5247195-5261607

வெற்றி இலக்கங்கள் 06 12 31 50

ஜக்பொட் பரிசு ரூபா 17,13,600/- வெல்லப்படவில்லை

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 72,02,480/-
தொடர் இல. 4365710 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கெட்டுக்கள் 2006 ஜூலை மாதம் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,18,333 | 10/- | 31,83,330/- |
| 2 இலக்கங்கள் | 29,219 | 20/- | 5,84,380/- |
| 1 இல+லக்கினம் | 29,009 | 30/- | 8,70,270/- |
| 2 இல+லக்கினம் | 2,720 | 100/- | 2,72,000/- |
| 3 இலக்கங்கள் | 768 | 500/- | 3,84,000/- |
| 3 இல+லக்கினம் | 77 | 5,000/- | 3,85,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| 4 இல+லக்கினம் | - | 17,13,600/- | - |
| மொத்தம் | | | 61,78,980/- |
| முச்சக்கர வண்டிகள் | 5 | 2,04,700/- | 10,23,500/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,80,136 | | 72,02,480/- |

இந்த செவ்வாய்க்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 24,24,950/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 5259836-4-05 |
| பதுளை | 5257596-8-49 |
| கண்டி | 5256906-3-85 |
| மொனராகலை | 5258389-1-60 |
| ஹம்பாந்தோட்டை | 5248551-9-19 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03

## ADMISSIONS OPEN

A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே ! அடுத்து என்ன ?

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற உயர்கல்வி
- வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்விக்கான வாய்ப்பு
- உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தையில் கௌரவமான வேலைவாய்ப்பு
- சொந்த மண்ணில் பெற்றோரின் அரவணைப்பில் உயர் கல்வி

பெற்றோர்களே !!

உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த ஓர் எதிர்காலத்திற்கான முதலீடு HND

பதிவுகளுக்கு நீங்கள் முந்திக்கொள்ளுங்கள்

BTEC HND
World Class Qualifications
Delivered Locally....... Recognised Globally

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

GCE A/L
with 2 Subjects

edexcel INTERNATIONAL
Approved Training Centre

IIS CITY CAMPUS
# 200, Sivan Pannai Road, Jaffna
TP No. : 021 222 8060 Fax : 021 222 6933 Email : iiscc@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் சேனைப் பயிற்சிகள் அக்கராயனில் ஆரம்பிக்கப்பட்டன

பரந்தன்,ஜூலை 3

கிளிநொச்சி அக்கராயன் கோட்ட மாணவர்களுக்கான மாணவர் சேனைப் பயிற்சிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளன.

இதன் ஆரம்பநிகழ்வுகள் கடந்தவாரம் இடம் பெற்றன.

அக்கராயன் பிரதேச மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் தமிழ்ப்பிரியன் தலைமையில் அக்கராயன் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரை பாடசாலை முதல்வர் ஐ.குகானந்தராசா ஏற்றினார்.

தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைக்க ஈகச்சுடரை அக்கராயன் பிரதேச நிர்வாகப் பொறுப்பாளர் சஞ்சீவ் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அக்கராயன் பிரதேச பயிற்சி ஆசிரியர் சீலன் தொடர்ந்து பயிற்சிகளை அரம்பித்து வைத்தார்.

கருத்துரைகளை பாடசாலை முதல்வர் ஐ.குகானந்தராசா, பிரதேச நிர்வாகப் பொறுப்பாளர் பாவரசன் ஆகியோர் நிகழ்த்த சிறப்புரையை கல்விக்கழகப் பொறுப்பாளர் செ.முகுந்தன் நிகழ்த்தினார்.

இவர் தனது சிறப்புரையில், கடந்தகாலங்களில் எமது தலைவர் ஏற்படுத்திய பலத்தினூடான சிறிய மாற்றம் இன்று உருவாக்கப்பட்டுள்ள பலம், எங்களுடைய மக்களின் எழுச்சி எதிர்காலத்தில் இவற்றினூடாக பெரும் வெற்றிகளைக் குவித்து எமது தாயகத்தை அமைக்கமுடியும்-என்றார். (203-352)

## மாலை நேர வகுப்பு மாணவருக்கு சீருடை விநியோகம்

வட்டக்கச்சி,ஜூலை3

கிளிநொச்சி காஞ்சிபுரம் கிராமத்தில் தமிழீழ மாணவர் அமைப்பினால் நடத்தப்பட்டு வரும் மாலை நேரக் கல்வி வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சீருடை வழங்கப் பட்டுள்ளது.

மாலைநேரக் கல்வி நிலைய ஆசிரியர் ஜெகதீஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கிளிநொச்சி நகர மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் அ.பரதன் கலந்து கொண்டு சீருடைகளை வழங்கியதுடன் மாணவரது கல்வி வளர்ச்சி தொடர்பான கருத்துரைகளையும் நிகழ்த்தினார்.

(203-405)

# ஆழிப்பேரலையால் பாதி[illegible] முல்லை நகரில் 12 வீடுக[illegible]

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு நகர மக்களுக்கான 12 நிரந்தர வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு கடந்தவாரம் நடைபெற் றுள்ளது.

முல்லைத்தீவு நகர ஊரக மேம்பாட்டுத் தலைவர் செ.உதயகுமார் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச் சுடரினை டொன் பொஸ்கோ அருட்தந்தை குழந்தை சுவாமி சொலமன் அடிகளார், முல்லைத்தீவு மாவட்ட பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக்கொடியினை கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் முல்லைச் செல்வன் ஏற்றினார்.

தொடர்ந்து முதலாவது வீட்டை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் நாடாவை வெட்டித் திறந்து வைக்க, வீட்டிறகான [illegible]ப்பினை குழந்தைசுவாமி சொலமன் அடிகளார் பயனாளியிடம் கையளித்தார்.

தொடர்ந்து கருத்துரைகளை முல்லைத் தீவு மாவட்ட திட்டமிடல் செயலக பணிப்பாளர் யாழமுதன், கரைத்துறைப்பற்று பிரதேசசபை ஆணையாளர் இ.கிருஷ்ணபிள்ளை, அரசியல்துறையைச் சேர்ந்த முல்லைச் செல்வன், குழந்தை சுவாமி சொலமன் அடிகளார், ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் ஆகியோர் நிகழ்த்தினர்.

ஏனைய வீடுகளை நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் கையளித்தனர். இந் நிகழ்வில் 12 வீடுகள் கையளிக்கப்படவுள்ளதாகவும், ஏனைய வீடுகளின் கட்டுமானப் பணிகள் பூர்த்தியானதும் அவை கையளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (203-405)

# முழங்காவில் வைத்தியசாலைக்கு கதிரியக்க உபகரணத் தொகுதி

வட்டக்கச்சி,ஜூலை 3

கிளிநொச்சி, முழங்காவில் பிரதேச வைத்தியசாலைக்கு ஜப்பானிய தொண்டு நிறுவனமான 'அம்டா' நிறுவனத்தினால் எக்ஸ்- கதிர் உபகரணத் தொகுதி அன்பளிப்புச் செய்யப் பட்டுள்ளது.

முழங்காவில் வைத்தியசாலையில் முன்னர் வார நாள்களில் 'அம்டா' நிறுவனத்தால் நடமாடும் எக்ஸ்- கதிர்ச் சேவையினை வழங்கி வந்தது.

இந்த நிறுவனத்தின் சேவைக்காலம் முடிவடைந்த நிலையில் அநத எக்ஸ்- கதிர் உபகரணத் தொகுதி வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதுடன்-

இந்த வைத்தியசாலையின் இரு பணியாளர்களுக்கு எக்ஸ்- கதிர் சேவை தொடர்பான முழுமையான பயிற்சியினையும் அவர்கள் வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-405)

# ஊரியான் முன்பள்ளியின் புதிய கட்டடத்துக்கு அடிக்கல்

வட்டக்கச்சி,ஜூலை3

கிளிநொச்சியின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள கோரக்கன்கட்டு ஊரியான் கிராமத்தில் புதிய முன்பள்ளி அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் சபையின் 'கப்பிற்றர்' நிறுவனத்தினதும், வடக்கு- கிழக்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தினதும் இணைந்த நிதிப்பங்களிப்புடன் இந்த புதிய முன்பள்ளி அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டுத் திட்ட உதவியாளர் த.சுசிகரன் தலைமையில் நடைபெற்றது.

முன்பள்ளிக்கான அடிக்கல்லினை ஊரியான் கிராம அலுவலர் சு.கேதீஸ்வரன், 'கப்பிற்றர்.' நிறுவன நகர முகாமையாளர் சண்முகலிங்கம், மாவீரர் மேஜர் இரட்ணம் அவர்களின் தந்தையாரான க.சுப்பிரமணியம் ஆகியோர் நட்டு வைத்தனர்.

நிகழ்வில் கருத்துரைகளை கிராம அலுவலர் சு.கேதீஸ்வரன், 'கப்பிற்றர்' நிறுவனத்தைச் சேர்ந்த சண்முகலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். (203-405)

# பூநகரியில் 164 குடும்பங்களுக்கு சூரிய மின்கலங்கள் அன்பளிப்பு

வட்டக்கச்சி,ஜூலை3

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 164 குடும்பங்களுக்கு சூரிய மின்கலங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய ஏற்பாட்டில், பூநகரி, முழங்காவில் அபிவிருத்தி நிறுவன ஒழுங்கமைப்பில் கிளிநொச்சி மாவட்ட உலக தரிசன நிறுவனத்தினால் இந்த சூரிய மின்கலன்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

வேரவில் கிராமத்தில் 80 குடும்பங்களுக்கும், ஈழவூர் கிராமத்தில் 43 குடும்பங்களுக்கும்-

பொன்னாவெளி கிராமத்தில் 17 குடும்பங்களுக்கும், பாலாவி கிராமத்தில் 24 குடும்பங்களுக்கும் சூரிய மின்கலன்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (203-405)

## ஆண்டு நிறைவு விழா

வட்டக்கச்சி, ஜூலை 3

கிளிநொச்சி இரணைமாதாநகர் சொக்கலிங்கம் சிறுவர் கல்வி ஊட்டல் மேம்பாட்டுப் போஷாக்குப் பூங்காவின் எட்டாம் ஆண்டு நிறைவு விழாவும் மாதாந்த கலை விழாவும் அண்மையில் நடைபெற்றன.

ஊரக வளர்ச்சிப் பணிமனையினரால் நிர்வகிக்கப்படும் இந்தப் பூங்காவின் நிர்வாகி பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் கலந்து கொண்டார்.

(203-405-352)

# அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பில் பொதுநோக்கு மண்டபத்துக்கு அடிக்கல்

கிளிநொச்சி,ஜூலை3

அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பில் பொதுமண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. அக்கராயன் அபிவிருத்தி நிறுவனம் இதனை நிர்மாணிக்கவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் யு.என்.எச்.சி.ஆர்., சொலிடார், போரூட் ஆகிய நிறுவனங்களின் நிதியுதவியுடன் இந்த மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

18 லட்சத்து 85ஆயிரத்து 500 ரூபா செலவில் இந்த மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல்லை பிரதேச செயலக உபபணிமனைப் பொறுப்பதிகாரி க.மகேந்திரம், தமிழர் புனர்வாழ்வுக் கழக அக்கராயன் பிரதேச உதவிப் பணிப்பாளர் சி.கே.நல்லையா, அக்கராயன் ஊரக மேம்பாட்டுப் பேரவையைச் சேர்ந்தவர்களான திருமதி க.ஜெயசீலி, க.மூக்கையா, கெங்காதரன் குடியிருப்பு கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் ம.அன்ரன், அக்கராயன் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் ம.சுதர்சன் ஆகியோர் நட்டுவைத்தனர். (203)

# லெப்.கேணல் தமிழ்முரசின் நினைவுக்கல் திரைநீக்கம்

கிளிநொச்சி,ஜூலை 3

தமிழீழக் கடற்பரப்பில் ஸ்ரீலங்கா படையினருடன் இடம்பெற்ற மோதலில் வீரச்சாவடைந்த லெப்.கேணல் தமிழ்முரசின் நினைவுக்கல் கிளிநொச்சியில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ மாணவர் பணிமனைப் பொறுப்பாளர் இனியவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் பொதுச்சுடர் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து . ாவீரரின் திருவுருவப் படத்திற்கு பெற்றோர் சுடரேற்றி மலர் மாலை அணிவித்தனர்.

இந்நிகழ்வில் பொன்.தியாகம்,கடற்புலிகளின் சமாச மேலாளர் மோகன் கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவராகிய விநாயகம் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர்.

தொடர்ந்து திருவுருவப்படம், அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு முழு இராணுவ மரியாதையுடன் நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்பட்டது. (203)

# கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க 'போரூட்' உதவியுடன் பசுக்கள் கையளிப்பு

வட்டக்கச்சி,ஜூலை 3

கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும் முகமாகப் பசுமைப்புரட்சிக்கான நிறுவனம் மக்களுக்கு பசுமாடுகளை வழங்கி வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் உருத்திரபுரத்தில் போரூட் நிறுவன நிதியுதவியுடன் ஏழு பயனாளிகளுக்கு பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

பசுமைப்புரட்சிக்கான நிறுவனத் தலைவர் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் காரானி செயற்கை சினைப்படுத்தல் மூலம் சினைப்படுத்தப்பட்ட பசுமாடுகள் வழங்கப்பட்டன.

இதேவேளை- உமையாள்புரத்திலும் தெரிவு செய்யப்பட்ட 10 பயனாளிகளுக்கும் பசுமாடுகள் வழங்கப்பட்டன. (203-405)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

# அடிப்படை வசதிகளின்றி முன்பள்ளி மாணவர் சிரமம்

பரந்தன்,ஜூலை3

மன்னார், ஈச்சிலாவக்கை கிராம முன்பள்ளி எதுவித அடிப்படை வசதிகளுமின்றி இயங்கு வருகின்றது.

25இற்கும் மேற்பட்ட சிறார்கள் இந்த முன்பள்ளியில் தமது ஆரம்பக்கல்வியை மேற் கொண்டுவருகின்றனர்.

இந்நிலையில், இந்த முன்பள்ளி நான்கு ஆண்டுகளுக்கு மேலாக ஓலைக் கொட்டகையிலேயே இயங்கிவருகின்றது.

இந்த இடம் மிகவும் சிறியதாக உள்ளமையால் கொட்டகைக்கு வெளியே வைத்தே சிறார்களுக்கு கற்பிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

மழைகாலங்களில் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதில் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (203-352)

# நடமாடும் மருத்துவசேவை

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு சிலாவத்தை அன்னம்மாள் கோவிலடி இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள மக்களுக்கான நடமாடும் மருத்துவ சிகிச்சையும் சுகாதார விழிப்புணர்வும் அண்மையில் நடத்தப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் கா.விஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நோயாளர்களிற்கான மருத்துவ சிகிச்சையை வைத்தியர் சுகுமார் மேற் கொண்டார்.

அத்துடன், மக்களுக்கான சுகாதார மேம்பாடு தொடர்பான விழிப்புணர்வு கருத்தூட்டல்களும் நடைபெற்றதுடன், பொதுச் சுகாதாரப் பணியும் முன்னெடுக்கப்பட்டது. இவற்றில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். (203-405)

# குடும்ப வாழ்வாதாரத்தை மேம்படுத்த கண்ணகைபுரத்தில் 29 பேருக்கு மானியம்

கிளிநொச்சி,ஜூலை 3

மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனம் கண்ணகைபுரம் கிராமத்தைச் சேர்ந்த 29 குடும்பங்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டுக்கென மானியம் வழங்கியுள்ளது.

யு.என்.எச்.சி.ஆர்., சொலிடார், போரூட் ஆகிய நிறுவனங்களின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் 5 லட்சத்து 38 ஆயிரத்து 600 ரூபா செலவில் இந்த மானியம் வழங்கப்பட்டுள்ளது.

அக்கராயன் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் ம.சுதர்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திட்டம் தொடர்பாக போரூட் நிறுவன கிளிநொச்சி மாவட்ட திட்ட இணைப்பாளர் எம்.ஏ.சுதர்சன், சொலிடார் நிறுவனத்தைச் சேர்ந்த வை.ஜஸ்ரின் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து பயனாளிகளுக்குக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

6 பயனாளிகளுக்கு பசுவளர்ப்பிற்கென ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 800 ரூபாவும் 5 பயனாளிகளுக்கு ஆடு வளர்ப்புக்கென 95 ஆயிரம் ரூபாவும் 2 பயனாளிகளுக்கு சிறுவியாபாரம் மேற்கொள்வதற்கென 37 ஆயிரம் ரூபாவும் நடமாடும் வியாபாரம் மேற்கொள்ள 2 பயனாளிகளுக்கு 37 ஆயிரம் ரூபாவும் விவசாயம் மேற்கொள்ள 12 பயனாளிகளுக்கு 2 லட்சத்து 20 ஆயிரத்து 800 ரூபாவும் தையல் தொழிலுக்கு 2 பயனாளிகளுக்கு 36 ஆயிரம் ரூபாவுமாக வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் கிராம அலுவலர், ஊரக மேம்பாட்டுப் பேரவையினர், அரசியல் துறையினர், போரூட் நிறுவன பிரதிநிதிகள், சொலிடார் நிறுவன பிரதிநிதிகள், காவல்துறையின் பிரதேச பொறுப்பாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதலாம் வருட உள்ள நெருடல் நினைவுகள்

## திருமதி இராசேந்திரம் பாக்கியம்

**தோற்றம்**
**29.07.1939**

**மறைவு**
**14.07.2005**

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம் மனம்
ஆசையுடன் பெற்று வளர்த்த அன்னையே எங்குற்றீர்?
ஈண்டு உமது நினைவாகவே நிதமும் நாம் வாடுகின்றோம்
ஈசனவன் பாதத்திலே இரண்டறக் கலந்தீரோ?
தூண்டாமணி விளக்காய் தூய ஒளி வீசிப் பிரகாசித்தீர்
துக்கம் தொண்டையை அடைக்கிறதே நின் பிரிவாற்றாது!
மாண்டு நீர் போனதால் மங்களம் இழந்ததே எம் மனை!
மனமாரத் துதிக்கின்றோம் பெறுக நீர் சாந்தியே!
*ஓம் சாந்தி!*

இன்று (*03.07.2006*) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காங்கேசன்துறை வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

அன்புடன்:
**குடும்பத்தினர்.**
T.P.: 021 222 5036

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தாத் பொதுச்சந்தையில் குண்டுத்தாக்குதல் 66 பேருக்குமேல் பலி; 100 பேர்வரை காயம்



பக்தாத்,ஜூலை3

பக்தாத்தின் பரபரப்புமிக்க பொதுச் சந்தையில் நிகழ்ந்த பாரிய குண்டுவெடிப்பொன்றில் 66 பேருக்குமேல் கொல்லப்பட்டார்கள். 100 பேர்வரை காயமடைந்தனர். ஷியாக்கள் வதியும் பகுதியான சாதர் நகரில் இந்தக் கார்க் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.

குண்டுவெடித்த இடம் ஒரு பெரும் கொலைக்களம் போன்றும் பேரழிவுக்குட்பட்ட இடம் போலும் காட்சியளித்தது. சிதறடிக்கப்பட்ட கார்கள், கடைகள், அங்காடிகள் மற்றும் வாகனங்களுக்கிடையில் இறந்தவர்களின் சடலங்களும் காயமடைந்தவர்களின் உடல்களும் சிதறிக்கிடக்கக் காணப்பட்டன.

பக்தாத்தில் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு புதிய அரசாங்கம் பெரும் பாடுபட்டு வருகின்றது. கடந்தவார இறுதியில் தேசிய ஐக்கியத்துக்கான திட்டம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆனால், இந்தக் குண்டுவெடிப்பானது சமீபகாலத்தில் தலைநகரில் நிகழ்ந்துள்ள மிகமோசமான நிகழ்ச்சியாகும்.

பொலீஸ் ரோந்து படையொன்று அவ்விடத்தைக் கடந்து செல்கையில் குண்டு வெடிக்கவைக்கப்பட்டு, பொலீஸார் மற்றும் பொதுமக்களின் தரப்புகளில் பெரும் எண்ணிக்கையானவர்களின் மரணத்துக்கு வழி செய்யப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் கூறினர். வேறொரு சம்பவத்தில் கடந்த சனிக்கிழமையன்று சினி இனத்தைச் சேர்ந்த பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அவரது ஏழு பாதுகாவலர்களும் கடத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஈராக்கிய ஒருமைப்பாட்டு முன்னணியின் உறுப்பினர் கடத்தப்பட்ட தாயிஸர் நஜா அல் - மஷாதானி - இவ்வமைப்புதான் நாடாளுமன்றத்தில் சன்னி தரப்பினரின் மிகப்பெரிய குழு. பக்தாத்தில் தீவிரவாதத் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கு பிரதம மந்திரி நவரி மாவிக்கி பாரிய அளவில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியதையடுத்து வன்செயல்கள் அதிகரித்துள்ளன.

அமெரிக்க விமானத்தாக்குதலில் அல்கெய்டா தலைவர் அபு முலபாப் அல் சார்க்காவி கொல்லப்பட்டதையடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் ஜரூர்படுத்தப்பட்டன.

ஆனால், இந்த நடவடிக்கைகளையடுத்து தாக்குதல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளனவென்று அமெரிக்க இராணுவ அதிகாரி கேணல் ஜெப்றெஸ்னோ தெரிவித்துள்ளார். இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க அவர்கள்மீதான தாக்குதல்களும் அதிகரிக்கின்றனவென்றார் அவர். (ப)

## காலநிலை சீரின்மையால் டிஸ்கவரி புறப்படவில்லை

விண்ணில் ஏவப்படவிருந்த 'டிஸ்கவரி' விண்கலம் மோசமான வானிலையால் கடைசி நேரத்தில் நிறுத்தப்பட்டது.

புறப்படத் தயாராக சகல ஏற்பாடுகளுடன் இருந்த நேரத்தில் வானில் மின்சாரத்தை தூண்டக்கூடிய மேகங்கள் இருப்பது தெரிய வந்தது. இதனால், மின்னல் தோன்றி அது டிஸ்கவரியைத் தாக்கக்கூடும் என்று தீர்மானித்ததால் விண்கலம் ஏவுவது உடனடியாக நிறுத்தப்பட்டது. 2003ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி விண்ணில் ஏவப்பட்ட கொலம்பியா விண்கலம் இதுபோன்றதொரு காரணத்தால் புறப்பட்ட சில நேரத்திலேயே எரிந்து சாம்பலானது. எனவே, அது போன்றதொரு சம்பவம் மீண்டும் ஏற்பட்டுவிடக் கூடாது என்று எண்ணிய நாசா விஞ்ஞானிகள் டிஸ்கவரியை கடைசிநேரத்தில் நிறுத்திவைத்து விட்டனர். எனினும் இன்று இதை ஏவுவதற்கான ஏற்பாடுகள் நடந்துவருகிறது. (202)

## உலகில் மிக உயரமான, நீளமான ரயில் பாதை

உலகின் மிக உயரமான, மிகவும் நீளமான ரயில் பாதையான குகிங்ஹாய்- திபெத் ரயில் பாதையில் முதல் பயணிகள் ரயில் சேவையை சீன அதிபர் ஹூ ஜிங்டோ நேற்றுமுன்தினம் ஆரம்பித்துவைத்தார்.

சீனாவின் வடமேற்குப் பகுதியில் உள்ளன கிங்ஹாய் மாகாணத்திலிருந்து, சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள திபெத்துக்கு ரயில் பாதை அமைக்கும் முயற்சியை சீன அரசு மேற்கொண்டது. ஆயிரத்து 956 கி.மீ. நீளமுள்ள ரயில் பாதையை வெற்றிகரமாக அமைத்து சீன அரசு சாதனை புரிந்துள்ளது.

இமயமலைத் தொடரை ஒட்டிச் செல்லும், உலகில் மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள ரயில் பாதை இதுவே என்ற பெருமையும் கிடைத்துள்ளது.திபெத்தின் தன்னாட்சி அதிகாரம் பெற்ற பகுதியுடன் சீனாவை இணைக்கும் முதல் ரயில் பாதையும் இதுவே.

# அல்கெய்டா தலைவர் பற்றிய தகவலுக்கு 23 கோடி ரூபா சன்மானம் அறிவிப்பு

வாஷிங்ரன்,ஜூலை3

ஈராக்கில் அல்கெய்டா அமைப்பின் மூத்த தலைவர் அபு அய்யூஞ்ப் அல்-மஸ்ரி பற்றிய தகவல் தருவோருக்கு 23 கோடி ரூபா பரிசாக அளிக்கப்படும் என அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியுறவுத்துறையின் துணை செய்தித் தொடர்பாளர் ஆதம் எரேலி தெரிவிக்கையில்,

அபு அய்யூப் அல்-மஸ்ரி எகிப்தைச் சேர்ந்தவர். மேலும், ஈராக்கில் அல்கெய்டா அமைப்பின் மூத்த தலைவராக உள்ளார். அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்ட ஜர்க்காவியுடன் நேரடித் தொடர்பு வைத்திருந்தவர். இவரைப் பற்றிய தகவல் தருபவர்களை ஊக்கு விப்பதற்காகவே இந்தப் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

அல்-மஸ்ரி பற்றிய தகவல் தெரிந்தோர் பக்தாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகம் ஈராக்கில் உள்ள இராணுவத் தளபதி அல்லது வேறு அமெரிக்கத் தூதரகங்களுக்குத் தெரிவிக்கலாம் - என்றார். (202)

# குஜராத் ஆலயத் தாக்குதல் இருவருக்கு மரணதண்டனை

அகமதாபாத்,ஜூலை3

குஜராத் மாநிலத்தின் புகழ்பெற்ற கோவிலான அக்ஷர் தாம் மீது தாக்குதல் நடத்தி 33 பேர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

மூன்று பேருக்கு தூக்குத்தண்டனையும் இரண்டு பேருக்கு 10 வருட சிறைத் தண்டனையும் ஒருவருக்கு 5 வருட சிறைத்தண்டனையும் விதித்து பொடா நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார்.

அக்ஷர்தாம் என்னும் சூரிய நாராயணன் கோயில் உலகப் புகழ்பெற்றது. 2002ஆம் ஆண்டு டிசெம்பரில் இக்கோவிலுக்குள் புகுந்த இரண்டு தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 33 பேர் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 81 பேர் படுகாயமடைந்தனர். தொடர்ந்து தேசிய பாதுகாப்புப் படை வீரர்கள் நடத்திய தாக்குதலில் அந்த தீவிரவாதிகள் இருவரும் கொல்லப்பட்டனர்.

இந்தக் கொடூரச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் 5 பேர் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்துள்ளனர்.

அந்த ஐவருடனும் மேலும் ஒருவருக்கும் நேற்றுமுன்தினம் தீர்ப்பளிக்கப்பட்டது.(202)

## விரைவில் பொதுத்தேர்தல் என்கிறார் ராஜ்நாத்சிங்

மத்திய அரசு பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது. எனவே, நாடாளுமன்றத்திற்கான இடைத்தேர்தல் விரைவில் வரும் என பா.ஜ. தலைவர் ராஜ்நாத்சிங் கூறியுள்ளார். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது. இதனால், விரைவில் மத்திய அரசு கவிழும். பொருளாதாரத்தைப் பொறுத்தவரை அரசு தனது கட்டுப்பாட்டை முழுவதுமாக இழந்துவிட்டது. எனவே, தேர்தல் விரைவில் வரும் என அவர் மேலும் தெரிவித்தார். (202)



அமெரிக்க தேனீவளர்ப்போர் சங்கத்தின் தலைவர் டென்சில் கிளார் கின்னஸ் சாதனை படைக்கும் முயற்சியில் உடலில் தேனீக்களை அடைத்து வைத்தார். மொத்தம் 73 இறாத்தல் எடை கொண்ட தேனீக்களுடன் அவர் இருந்தார். ஆனால், கின்னஸ் சாதனையான 87.5 இறாத்தல் எடைகொண்ட தேனீக்களுடன் வாழ்ந்த சாதனையை அவரால் முறியடிக்க முடியவில்லை.

# 86இல் நடந்த மாணவர் படுகொலை தொடர்பாக மெக்ஸிக்கோவின் முன்னாள் அதிபர் கைது

மெக்ஸிக்கோவின் முன்னாள் அதிபர் லூயிஸ் எஷிவெர்ரியா கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டு வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் 1970 முதல் 76 வரை அதிபராகப் பதவி வகித்தவர். 1968இல் உள்துறை அமைச்சராக இருந்தார். அப்போது மெக்ஸிக்கோ சிட்டியில் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய கிளர்ச்சியாளர்களை ஈவிரக்கமின்றி அடக்கும்படி பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிட்டார். இச்சம்பவத்தில் நூற்றுக் கணக்கான மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இத்துடன் 1971இல் நடைபெற்ற ஒரு சம்பவத்திலும் பாதுகாப்பு படையினரால் குறைந்த பட்சம் 12 பேர் கொல்லப்பட்டனர். ஆனால், இச்சம்பவத்துக்கும் எஷிவெர்ரியாவுக்கும் தொடர்பில்லை என்று கடந்த ஆண்டு அவர் மீதான வழக்கைத் தள்ளுபடி செய்தது நீதிமன்றம். இவ்விரு சம்பவங்களுக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என்று எஷிவெர்ரியாவும் மறுத்துள்ளார். ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை, மாணவர் படுகொலை சம்பவம் தொடர்பாக எஷிவெர்ரியா கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக அரசுத் தகவல்கள் தெரிவித்தன.

புதிய அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல் நடைபெறவுள்ள இவ்வேளையில், முன்னாள் அதிபர் கைது செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (202)

**பலஸ்தீன அமைப்பு அலுவலக அந்தஸ்தைக் குறைக்கும் திட்டம்**

# நடைமுறைப்படுத்தும் உத்தரவை உடனடியாகவே வாபஸ் பெற்றார் புஷ்

மெம்பிஸ்,ஜூலை3

அமெரிக்காவில் இயங்கும் பலஸ்தீன விடுதலை அமைப்பின் அலுவலகத்தின் அந்தஸ்தைக் குறைக்கும் திட்டத்தை அமெரிக்க அதிபர் புஷ் உடனடியாகவே கைவிட்டார்.

இதுதொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலீஸா ரைஸிற்கும் அமெரிக்க அதிபர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

பலஸ்தீன விடுதலை அமைப்பும் பலஸ்தீன அரசும் சட்டத்திற்கு அமைவாக நடக்கவில்லையெனக் குறிப்பிட்டு பலஸ்தீன விடுதலை அமைப்பின் அந்தஸ்தை தற்காலிகமாகக் குறைத்தார் புஷ். ஆயினும், இத்திட்டத்தை அறிவித்த வேகத்திலேயே அதனைக் கைவிட்டார்.

இந்த நடவடிக்கைகள் குறித்து கொண்டலீஸாரைஸிற்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இந்தத் தடையும் அதை அமுல்படுத்துவதில்லை என்ற ஆணையும் ஜூன் 30ஆம் திகதியிலிருந்து 180 நாள்களுக்கோ அல்லது பலஸ்தீனர்களின் நடவடிக்கைகள் தொடர்பாக அதிபர் மாளிகை புதிய அறிக்கை தரும் வரை அமுலில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (202)

# இஸ்ரேல் விமானங்கள் காஸாமீது தாக்குதல்: பலஸ்தீன பிரதமர் அலுவலகமும் தப்பவில்லை

காஸா, ஜூலை3

பலஸ்தீனத்தில் ஹமாஸ் தலைமையிலான அரசின் பிரதமர் இஸ்மாயில் ஹனியா அலுவலகம் மீது நேற்றுக்காலை இஸ்ரேல் விமானப்படை தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேலியப் போர் விமானத்தில் இருந்து ஏவப்பட்ட இரண்டு ஏவுகணைகள் பிரதமர் அலுவலகத்தின் தெற்குப் பகுதியைத் தாக்கியதில் அலுவலகம் தீப்பிடித்துக் கொண்டது. அந்நேரம் பிரதமர் அங்கு இல்லாததால் அவர் உயிர் தப்பினார். எனினும் இந்தத் தாக்குதலில் இரண்டு பலஸ்தீன பாதுகாப்பு வீரர்கள் காயமடைந்ததாகத் தெரிகிறது.

தொடர்ந்து இஸ்ரேல் இராணுவம் அங்கு தாக்குதல் நடத்தி வருகிறது. அண்மையில் இஸ்ரேல் எல்லைப்பகுதியில் பாதுகாப்பு பணியில் இருந்த இஸ்ரேல் இராணுவ வீரர் ஒருவரை பலஸ்தீன இராணுவத்தினர் கடத்திச் சென்று இன்னும் விடாமல் இருப்பதனால்தான் இந்தத் தாக்குதலை இஸ்ரேல் நடத்தி வருகிறது.

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T: 021 222 6242
021 2223984
Fax: 021 222 5600
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979
New way of Flying
யாழ் - கொழும்பு விமான சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெங்காயச் செய்கையாளருக்கு அமோ ருமானம்

யாழ்ப்பாணம்,ஜூலை3

வடமராட்சியில் வெங்காயச் செய்கையாளர்களுக் ஆவ்வருடம் அமோக வருமானம் கிடைத்துள்ளது எனத் தெரிவிக் கப்பட்டது. ஒரு அந்தர் வெங்காயம் மூவாயிரத்து 300 இல் இருந்து மூவாயிரத்து 500 வரை விற்பனை செய்யப்படுகின்றது.

கடந்த வருடத்தினைவிட வடமராட்சி மயிலியதனை, ஊரிக்காடு, கெருடாவில், கொம்மந்தறை, கம்பர்மலை ஆகிய பகுதி விவசாயிகளே பெரு நன்மையடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (185)

## மரண அறிவித்தல்கள்



### இளையவி தங்கராசா

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் - உள்ளூராட்சி திணைக்களம்)

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் பன்னாலை, தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக துரைவீதி, தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையவி தங்கராசா 28-06-2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையவி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் வேவியின் அன்புக் கணவரும் கலைவாணி (கனடா), பகீரதன் (பொறியியலாளர் - லண்டன்), கலைவதனி (பி.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் -யாழ்.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுந்தரலிங்கம் (கனடா), பவானந்தன் (ஆசிரியர்-மாலைதீவு) ஆகியோரின் மாமனும் தங்கமுத்துவின் அன்புச் சகோதரரும் துர்க்கா, சாருகா(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-07-2006) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துரைவீதி,
தாவடி வடக்கு, தாவடி.
தொ.பே.0777853948 (51843)(26.17)

தகவல்:
**மனைவி, மக்கள், மருமக்கள்.**



### திருமதி அன்னம்மா இராசரத்தினம்

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா இராசரத்தினம் நேற்று (02-07-2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான கணபதிப்பிள்ளை - நல்லபிள்ளை தம்பதியரின் மகளும் அமரர் இராசரத்தினம் (ஓய்வுபெற்ற பொலீஸ் அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும் அன்புமலர், இராசமலர் (ஆசிரியர், யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும் சு.சிதம்பரநாதன் (சங்கானை ப.நோ.கூ. சங்க ஊழியர்), வே.ஞானகுரு ஆகியோரின் அருமை மாமியும் பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.மாணவர்களான நீதிமதி, மகோதரன், முரளிதரன், யசோதரன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் அமரர் சரவணப்பெருமாள் (சிங்கப்பூர்), கந்தசாமி, பரமசிவம், பொன்னம்மா (சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (03-07-2006) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம்.
தொ.பே.0776405225 (51824)(26.17)

தகவல்:
**சு.சிதம்பரநாதன் (மருமகன்).**

## மஹிந்த வாசனாவ

அதிர்ஷ்ட இல. 1723

01.07.2006 ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

**வெற்றி எண்கள்** சுப்பர் எண்

**08 15 23 28 (04)**

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 301171475 இலிருந்து 301186952

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா **1,61,90,400/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,61,90,400/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 24 | 5,000/- | 1,20,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 415 | 1,000/- | 4,15,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,323 | 500/- | 6,61,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 20,032 | 40/- | 8,01,280/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 18,898 | 20/- | 3,77,960/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,85,513 | 10/- | 28,55,130/- |
| மொத்தம் | | | 72,30,870/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், பைசிக்கிள் | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,26,212 | | 78,30,870/- |

தொடர் இல. 201269114 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கெட்டுக்கள் 2006 ஜூலை மாதம் 05 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

**இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 1,69,52,550/-**

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கள் அடங்கிய பரிசு முறியை வென்றெடுத்த 5 டிக்கெட்டுக்களின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 301182745-6-76 |
| குருநாகல் | 301182410-7-37 |
| பொலன்னறுவை | 301185846-7-10 |
| நுவரெலியா | 301184865-3-49 |
| கம்பஹா | 301173273-8-29 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03

## மரண அறிவித்தல்

### திருமதி றெஜினம்மா லூக்காஸ்

சென்.ஜேம்ஸ் வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி றெஜினம்மா லூக்காஸ் நேற்று முன்தினம் (01.07.2006) சனிக்கிழமை காலை காலமனார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைபிலிப்பு - பிலிப்பு றோசம்மா தம்பதியரின் அன்பு மகளும் பிலிப்பு லூக்காஸ் அவர்களின் பாசமிகு மனைவியும் வலன்சியாமகி (ஆசிரியை, மன்னார் சித்தி விநாயகர் தேசியப்பாடசாலை), அன்ரன் லியோ (மொறிசியஸ்), மரீனஸ் யூஜின், றெஜினியூட் அவலின் (அருட் சகோதரன் அ.ம.தி), கில்லறியன் பிளேசியஸ், யோசவாசன் ஆகியோரின் அன்புத் தாயும் லோகநாதன் லியனாட் டன்ஸ்ரன், நிரஞ்சினி ஆகியோரின் மாமியும் கிசோர் கவிராஜ், லக்சிகா நிவேதினி, பொஸ்கோ ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(03-07-2006) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியின் பின்னர் புனித யாகப்பர் பங்கு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்.ஜேம்ஸ் வீதி,
இளவாலை. (சி/49933)(26.17.11)

தகவல்:
**கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## லயன்ஸ் கழகத்தின் நலன் திட்டங்கள்

தென்மராட்சி,ஜூலை3

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 28ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பல்வேறு நலன்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கபட்டன.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் புதிய தலைவராகப் பொறுப்பேற்ற லயன் வ.ஸ்ரீபிரகாஸ் இந்த நலத்திட்டங்களை அறிவித்தார்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி செயற்பாட்டுக்கு புலமைப் பரிசில் நிதி வழங்கியும் மேலும் பல மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கியும் முதியோர் நலன்கருதி உதவிகள் வழங்கியும் மரக்கன்றுகள் நாட்டும் திட்டத்திற்கு மரக்கன்றுகள் வழங்கியும் நலத் திட்டங்கள் ஆரம்பித்துவைக்கப்பட்டன. (117)

## பொதுக்கிணறுகள் துப்புரவு செய்யப்பட்டன

நல்லூர்,ஜூலை3

நயினாதீவிலுள்ள பொதுக்கிணறுகள் பாடசாலை சாரணர் குழுக்களால் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த திருவிழா தற்போது நடைபெற்று வருகின்றது. அதனையொட்டி அங்குள்ள 30 பொதுக்கிணறுகள் பாடசாலை சாரணர் குழுக்களால் துப்புரவு செய்யப்பட்டுள்ளன என்று பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். (111)

## நயினாதீவில் காலாவதியான பொருள்கள் அழிப்பு

நல்லூர்,ஜூலை3

நயினாதீவு வர்த்தக நிலையங்களில் இருந்த காலாவதியான உணவுப் பொருள்கள் நெடுந்தீவு சுகாதார பரிசோதகரின் உதவியுடன் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன என பொது சுகாதார பரிசோதகர் க. ஜெயகணேஷ் தெரிவித்தார். (111)

## விமானப் படை முன்னாள் தளபதி விடுதலை

கொழும்பு,ஜூலை3

முன்னாள் விமானப்படைத் தளபதி ஜயலத் வீரக்கொடி கவனக்குறைவாக வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுத் தொடர்பான வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

இவர் கொழும்பு உயர்நீதிமன்ற நீதவானான உபாலி விஜயசுந்தரவினால் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் திகதி தனது உத்தியோகபூர்வ வாகனத்தை வீதிச்சமிக்ஞைகளைப் பின் பற்றாமல் கவனயீனமாக செலுத்தியதன் மூலம் கருணமுனி இரத்னசேன சில்வாவின் மரணத்துக்கு காரணமாக இருந்துள்ளார் என்பதே இவர்மீதான முக்கியக் குற்றச்சாட்டு. ஆனால் வீரக்கொடி தன்மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பாக நீதிமன்றில் கூறும்போது சம்பவம் இடம்பெற்ற தினம் வேறொரு அதிகாரியே வாகனத்தைச் செலுத்தியதாகக் குறிப்பிட்டிருந்தார்.

நீதிபதி எதிரியை குற்றமற்றவர் எனக் கண்டு விடுதலைசெய்தார்.

## மரண அறிவித்தல்

### இராமர் கந்தையா



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட இராமர் கந்தையா நேற்று (02-07-2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக்கணவரும் க.ஜெகதீஸ்வரன் (பிரான்ஸ்), சிவனேஸ்வரன் (நீர்வேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர்)ஆகியோரின் அன்புத்தந்தையும் கெங்கா (பிரான்ஸ்), கமலாதேவி ஆகியோரின் மாமனும் மயூரன், அபிரா, மயூரி (பிரான்ஸ்), சஞ்சீவன் டிலக்சனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-07-2006) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**க.சிவனேஸ்வரன் (மகன் -சிவா)**

கட்டைப்பிராய்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(51824)(26.11.17)


மெகா விசேட சிறப்புச் சலுகை

60% நேரடிக் கட்டணக் கழிவு

இம்முறை A/L பரீட்சை எழுதும் மாணவர்கள் மற்றும் கணனி உயர் கல்வியில் ஆர்வம் உடையவர்கள் அனைவரும் பயனடையும் விதமாக ஏசியன் கொம்பியூட்டர்ஸ் மாணவர்கள் தெரிவுசெய்யும் பாடநெறிகளுக்கு 60% நேரடிக் கட்டணக் கழிவை வழங்குகின்றது. அத்துடன் இலவசப் பாடநூல்கள், தவணை முறையில் கட்டணங்கள் மற்றும் குறுகிய காலத்தில் பாடநெறியைப் பூர்த்திசெய்யும் வாய்ப்பும் வழங்கப்பட இருக்கின்றது. இச் சலுகை பற்றிய மேலதிக விவரங்களையும் இலவச ஆலோசனைகளையும் கீழ்க்கண்ட எமது பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.



EDUCATION PARTNERS
CSC
COMPUTER EDUCATION
ISO 9001:2000 Certified Institution

Tally
Tally Graduate Academy - India

LIMITED STUDENTS ONLY

TATA NEXT GENERATION

Computer Education for Success

1. Advanced Diploma in Software Engineering
2. Diploma in Office Automation
3. Professional Diploma in Graphic Design
4. Adv. Dip. In Macromedia Applications
5. Adv. Diploma in Hardware & Networking
6. Honours Diploma in Computer Application
7. Diploma in PC Professional
8. Dip. in Advanced Software Technology
9. Diploma in Web Design & Development
10. Tally Graduate Training

ASIAN COMPUTER SYSTEMS

யாழ்ப்பாணம் — 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 5677
யாழ்ப்பாணம் - CSC — 101, 2ம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 8196
நெல்லியடி — நெல்லியடி. 077-3122198
சாவகச்சேரி — வீதி, சாவகச்சேரி. 077-3039587


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் இரத்த வங்கி, புனரமைக்கப்பட்ட பற்சிகிச்சை நிலையம் ஆகியவற்றின் திறப்பு விழாவும், பரிசாரகர்களுக்கான பயிற்சி வகுப்பின் ஆரம்ப நிகழ்வும் நேற்று முன்தினம் சனிக்கிழமை வைத்தியசாலையில் நடைபெற்றன.

பற்சிகிச்சை நிலையத்திறப்பு விழாவில் பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஏ.கேதீஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், புதிய இரத்த வங்கி இரத்த சேமிப்பு இயந்திரத்தை யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பணிப்பாளர் டாக்டர் எஸ். சிவசங்கர் இயக்கி வைப்பதை இரண்டாவது படத்திலும்-

பரிசாரகர்களுக்கான பயிற்சியை வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ். குமாரவேல் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், பயிற்சியில் கலந்து கொண்டவர்களை மூன்றாவது , நான்காவது படங்களிலும் இரத்த வங்கியை இறுதியாகவுள்ள படத்திலும் காணலாம்.

(படங்கள்: சி. சுந்தரலிங்கம் கரவெட்டி செய்தியாளர்)


## புதிய பிரிவுகள் ஆரம்பம்

A/L எடுத்தோருக்கும், ஏனையோருக்குமான
Spoken English With Grammar.
Lectures by:- Mr.K.Nishanthan (Dip.in.Eng.)
வடமராட்சி மண்ணில் இரு முன்னணி நிறுவனங்களில்
* மொடோண் கல்விநிலையம் - நெல்லியடி (திங்கள், புதன், வெள்ளி -At 8 a.m.)
* மொடோண் கல்வி நிலையம் - பருத்தித்துறை (திங்கள், புதன், வெள்ளி - At 9 a.m.)
* ஆரம்பம்: - 05.07.2006 - புதன்

குறிப்பு:- குறுகிய காலத்தில் எழுத, வாசிக்க, பேச கற்றுக்கொடுக்கப்படும்.
* கணனி மூலமான பேச்சு பயிற்சிகளும் வழங்கப்படும்.
* G.A.Q. மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான Paper Class ஆரம்பம் 07.07.2006 (திங். வெள். At 7 a.m.) (நெல்லியடியில்)


## கண்ணீர் அஞ்சலி



எமது முன்னாள் பீடாதிபதி
பேராசிரியர் **மா. நடராஜசுந்தரம்**
அவர்களின் அன்புத் துணைவி
திருமதி **மங்களேஸ்வரி நடராஜசுந்தரம்**
அவர்களின் திடீர் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**முகாமைத்துவ கற்கைகள் 4ஆம் வருட மாணவர்கள்.**
**(2002/ 2003, 2003/ 2004).**

*வணிகபீடம்,*
*யாழ். பல்கலைக்கழகம்.* (51848)

## கண்ணீர் அஞ்சலி



எமது முகாமைத்துவ துறையின்
பேராசிரியர்
**மா. நடராஜசுந்தரம்** அவர்களின்
அன்பு மனைவி
திருமதி
**மங்களேஸ்வரி நடராஜசுந்தரம்**
அவர்களின் திடீர் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*முகாமைத்துவ கற்கைகள் துறை.*
*யாழ். பல்கலைக்கழகம்* (51848)

**முகாமைத்துவ துறைத் தலைவர், விரவுரையாளர்கள், ஊழியர்கள்.**

## மரண அறிவித்தல்

### ஸ்ரீமதி பூரணம்மா பாலசுந்தரக்குருக்கள்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் மீசாலைக் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி பூரணம்மா பாலசுந்தரக்குருக்கள் நேற்று (02.07.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுந்தரக்குருக்கள் (முன்னாள் மீசாலை பூசகர் - வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயில்) அவர்களின் அன்பு மனைவியும், கணேசலிங்க குருக்கள் (ஆசிரியர்), காலஞ்சென்ற கந்தவேள் குருக்கள், சிவலிங்கம் ஐயா (அர்சகர், மாவடிப் பிள்ளையார் ஆலயம்), உமா மகேஸ்வரர் ஐயர் (அர்சகர், மீசாலை சித்தர வேலாயுதர் கோயில்), திலகவதி ஆகியோரின் அன்புத் தாயும் சிவமதி, விகினேஸ்வரக்குருக்கள் (பிரதமகுரு, வல்வெட்டி வேவில் பிள்ளையார் கோயில் - சமுர்த்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமியும் வித்தியா, சாகர், விஜிதா, துசியந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் கொற்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*

தகவல்:
*ப்ர.சிவலிங்கம் ஐயா,*
**(சிவா ஐயா).**

(சி- 49942)

## தொலைபேசி அழைப்புகளை இனங்காணும் வசதி

கொழும்பு, ஜூலை 03

முன்னணி பாடசாலைகளுக்கும், மருத்துவமனைகளுக்கும் தொலைபேசி அழைப்புகளின் இலக்கங்களைத் தெரிந்து கொள்ளும் வசதி (Caller Line Identification) வழங்கப்படவுள்ளது.

அநாமதேய தொலைபேசி அழைப்புகள் பல பாடசாலைகளுக்கும், மருத்துவமனைகளுக்கும் கிடைப்பதை அடுத்தே இந்த வசதியை வழங்குவதற்கு ஏற்பாடாகி உள்ளது.

தொலைபேசி வாயிலாக வதந்திகளைப் பரப்பி பாடசாலைகளில் பதற்றத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்த சில சக்திகள் முயன்று வருவதால் அவ்வாறான அநாமதேய தொலைபேசி அழைப்புகளை இனங்காண்பதற்கு வசதியாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

அழைக்கும் இலக்கங்களை அறிந்து கொள்ளக் கூடிய தொலைபேசி வசதியை பாடசாலைகளுக்கும், மருத்துவமனைகளுக்கும் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)


புதிய வெளியீடு



யுனிவர்சிட்டி புகழ் ஜீவன், சோனியா அகர்வால், விவேக் நடித்த
திருட்டு பயலே
மனோகரா யாழ்ப்பாணம்
10.30, 2.30, 6.30 மட்டும்

ராஜா யாழ்ப்பாணம்
கரன், சாதனா நடித்த
கொக்கி
புதிய வெளியீடு
(சி-47139)
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
காட்சி நேரம் : 10.30, 2.30
ஜித்தன் புகழ் ரமேஸ், பிரியாமணி, விவேக் நடித்த
மது
(சி-49188)

அரசாங்க முகாமை உதவியாளர் போட்டிப் பரீட்சை வழிகாட்டி - 2006
(எழுதுநர் சேவை)
பொதுஉளச்சார்பு
மொழித்திறன்
P. உமாசங்கர்
விலை 250/-
கடந்த காலப்பரீட்சை வினா விடைகளும் முற்றிலும் எதிர்பார்க்கும் மாதிரி வினாத்தாள்களும் விடைகளுடன் மொத்தமாகவும், சில்லறையாகவும்
[illegible]
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### செல்வி நவலெட்சுமி சதாசிவம்



(மதுரி - யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை பழைய மாணவி)

யாழ்ப்பாணம், இல. 46, அத்தியடி புது வீதியை சேர்ந்த செல்வி நவலெட்சுமி சதாசிவம் (மதுரி) அவர்கள் 30.06.2006 அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் சதாசிவம் (ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)- நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் மகேஸ்வரன் (லண்டன்), காலஞ்சென்ற ஜெயலெட்சுமி, லோகேஸ்வரன் (லண்டன்), காலஞ்சென்ற தமிழரசுவரன் (அர்ச்சுனா), சத்தியவாகேஸ்வரன் (லண்டன்), மங்களேஸ்வரன் (லண்டன்), திருக்கேஸ்வரன் (லண்டன்), திலகலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சித்ரா (லண்டன்), சரஸ்வதி (லண்டன்), இலக்னேஸ்வரி (லண்டன்), குகநந்தினி (லண்டன்), சாந்தினி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும் ஜெயலெட்சுமி, அர்ச்சுனா, கஸ்தூரி, சுதந்தன், பிரியந்தன், மயூரதன், கார்த்திகன், கபிலன், அர்ச்சனா, கீர்த்தனா, விஷ்ணு ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2006) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு இல. 180, கோவில் வீதியில் (கைலாச பிள்ளையார் கோயிலடி) உள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*180, கோவில் வீதி,*
*கைலாசபிள்ளையார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.* (51635)

தகவல்:
**குடும்பத்தினர்.**

### திருமதி இராசம்மணி சாமிநாதன்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், யாழ். கொட்டடி சீனிவாசன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது லண்டனில் வசித்து வந்தவருமாகிய திருமதி இராசமணி சாமிநாதன் அவர்கள் நேற்று (02.07.2006) ஞாயிற்றுக் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் தியாகராசா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் மற்றும் சாமிநாதன் (லண்டன்- சாமி - முன்னாள் சத்திரச்சந்தி உணவகம் , யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் யோகேந்திரன் (லண்டன்), கிருபாகரன் (லண்டன்), யோகரஞ்சினி (லண்டன்), சாந்தினி (லண்டன்), நிர்மலா (லண்டன்), யாழினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான கணேசு, கோபாலபிள்ளை, சின்னராசா சிவக்கொழுந்து, நாகரெத்தினம் (ஆசிரியை) மற்றும் சண்முகராஜா (நயினை நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை ஆரம்பகர்த்தா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, காங்கேசு, இராசம்மா, வாலாம்பிகை மற்றும் அருணாசலம், மீனாட்சி, திருநாவுக்கரசு (டாக்டர், சட்டத்தரணி) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
**வே.மு.சண்முகராஜா**
(நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை ஆரம்பகர்த்தா, நயினாதீவு ஸ்ரீ பகவான் சாயி பஜனை நிலையத் தலைவர், நயினாதீவு தெற்கு கிராம முன்னேற்ற அபிவிருத்திச் சங்கத் தலைவர், நயினாதீவு முற்சக்கரவண்டி சங்கத் தலைவர்).

*வட்டாரம் - 07*
*நயினாதீவு.*
*தொலைபேசி இலக்கம்.*
*0712524573.* (51635)

### முருகேசு ஸ்ரீரஞ்சிதன் (கண்ணன்)



நீராவியடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் நந்தாவிலை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு ஸ்ரீரஞ்சிதன் அவர்கள் நேற்று (02.07.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - பிள்ளையம்மா தம்பதியரின் அன்பு மகனும் யோகராணி, புஸ்பராணி, இந்திராணி, மல்லிகாராணி (ஜேர்மனி), ஜெயராணி (பிரான்ஸ்), ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தணிகாசலம், ராஜ்குமார், ராஜேஸ்வரன் (குட்டி - ஜேர்மனி), உதயகுமார் (பிரான்ஸ்), தமயந்தி (ஆசிரிய பயிற்சி கலாசாலை, கோப்பாய்) ஆகியோரின் அன்பு மைத்துனனும் சிந்துஜன், டிலோஷா, டிலக்ஷன், சுஜிதன், சுஜிதா, திவிசன், தர்சன் ஆகியோரின் மாமனும் துவிகாசனின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2006) திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் இல. 116, கோவில் வீதி, கொக்குவில் கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*116, கோவில் வீதி,*
*கொக்குவில் கிழக்கு.* (சி- 49940)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிமடைப் பகுதியில் புலிவேட்டை; 20 இளைஞர்கள், 5 யுவதிகள் கைது!

வெலிமடை பகுதியைச் சேர்ந்த ஒன்பது தோட்டங்களை நேற்று அதிகாலை நான்கு 4மணிமுதல் முற்பகல் 11 மணிவரை படையினரும், பொலிஸாரும் சுற்றிவளைத்துத் தேடுதலை மேற்கொண்டனர். இத்தேடுதலில் இருபது இளைஞர்களும், யுவதிகள் ஐவரும் கைது செய்யப்பட்டனர்.

வார்விக் மேற்பிரிவு, வார்விக் கீழ்ப்பிரிவு, கிளன்சி, அம்பேவெலை மேற்பிரிவு, அம்பேவெலை கீழ்ப்பிரிவு, கிளனோஜி, ஹக்கலை, சிலம்டன், அபரகலை ஆகிய தோட்டங்களிலேயே இந்தச் சுற்றிவளைப் புத் தேடுதல் நடத்தப்பட்டது. இதனால் அத் தோட்டங்களில் பெரும் பதற்றமும், பீதியும் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து, ஊவாமாகாண சபை உறுப்பினரும், மலையக மக்கள் முன்னணியின் மாகாணப் பொறுப்பாளருமான அ. அரவிந்குமாரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

அவர் இளைஞர் யுவதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வெலிமடை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று, இக்கைதுகள் குறித்துக் கடும் அதிருப்தியைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் தெரிவித்தார்.

அப்பகுதிக்குப் பொறுப்பாக இருக்கும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எட்சன் குணதிலக்கவிடம் இது குறித்துக் கேட்ட போது, "வடக்கு - கிழக்கு பகுதிகளிலிருந்து புலி உறுப்பினர்கள் இத் தோட்டப் பகுதிகளுக்குள் புகுந்திருக்கின்றார்கள் என்று தகவல் கிடைத்தால்தான், சுற்றிவளைப்புத் தேடுதல்களை மேற்கொண்டு சந்தேகத்தின் பேரில் பலரைக் கைது செய்துள்ளோம்'' என்று கூறினார்.

கைதான அனைவருமே தோட்டத்திற்கு சம்மந்தப்பட்டவர்கள். வெளியார் எவரும் கைதில் இடம்பெறவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்டவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் அவர்களை விடுதலை செய்வோம் என்று பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். ஆனால், நேற்றுமாலைவரை எவரும் விடுவிக்கப்படவில்லை

- என்று தெரிவிக்கப்பட்டது. (க)

## கரும்புலிகள் தின ஊர்திப் பவனி

கிளிநொச்சி,ஜூலை3

கரும்புலிகளின் உவருப் படங்களைத் தாங்கிய ஊர்த்தி இன்று பளை, கிளிநொச்சி, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளில் பவனி வர உள்ளது.

கரும்புலிகள் தின யாழ்.மாவட்ட ஏற்பாட்டுக் குழுவினரின் ஒழுங்மைப்பில் இந்த கரும்புலிகள் தின ஊர்திப் பவனி இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குடாநாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருநேல்வேலி கிழக்கு முடமாவடிப் பகுதி, அரியாலை, வண்ணை சிவப்பிரகாசம் வீதியில் ஒரு பகுதி என்பனவும் படையினரின் சுற்றிவளைப்புக்கு உட்படுத்தப்பட்டன என்றும் அவ்வேளை வீதியின் ஊடாகப் பயணித்த பொதுமக்கள் படையினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் அவர்கள் பயணிக்க அனுமதிக்கப்பட்டனர் என்றும் கூறப்பட்டது. (173-70)

## பணிப்புறக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைநிறுத்தப்பட்டது.

ஆயினும் இராணுவ வெறியாட்டம் தொடர்ந்தது. அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவதும் அதன் உச்சக் கட்டமாக மாவீரர் துயிலும் இல்லங்கள், மாவீரர் நினைவுத் தூபிகள் சேதமாக்கப்படுவதும் தொடர்ந்தது. ஸ்ரீலங்கா படையினரும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் எமது இனத்தைக் காட்டிக்கொடுத்து உயிர் வாழும் ஈ.பி.டி.பி. ஒட்டுக்குழுவினரும் தமிழின விரோதச் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டனர்.

இத்தகைய சூழலில் குடாநாட்டில் வாழும் எமது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சிங்களப் படைகளின் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கடந்த வாரம் தொடக்கம் மீண்டும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தோம்.

தமது அராஜகங்களுக்கு எதிராக எதனையும் செய்யக்கூடாது என விரும்பிய ஆக்கிரமிப்புப் படைகள் இந்தப் போராட்டத்தைக் குழப்ப உச்சக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டன. கொலைப் பயமுறுத்தல், பணி இடைநிறுத்தம் என தமக்குத் தெரிந்த வகையில் எல்லாம் எம்மை மிரட்டமுற்பட்டனர்.

ஆனால் எமது மக்கள் இவற்றுக்கெல்லாம் அடிபணியாமல் எதிரிக்கு எதிராகப் போராட வேண்டும் என்பதில் திடமாகவே செயற்பட்டு வந்தனர்.

இந்த நிலையில், எதிர்கால சந்ததியினரை உயர்த்திவைக்கப்போகும் கல்விச் செயற்பாடுகள் பற்றி நாம் சிந்திக்கவேண்டியவர்களாக உள்ளோம்.

அடுத்து வரப்போகும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ.சாதாரண தரப்பரீட்சை மற்றும் பரீட்சைகளுக்கு எமது மாணவர்கள் தோற்றவேண்டியஅவசியம் இருப்பதாலும்-

எமது மக்களின் ஒட்டுமொத்தமான எதிர்ப்பினை ஸ்ரீலங்கா அரசுக்கும் அதன் ஆக்கிரமிப்புப் படைகளுக்கும் காட்டிவிட்டதாலும் இன்றிலிருந்து வழமைபோன்று எமது அனைத்துச் செயற்பாடுகளையும் ஆரம்பிப்போம்.

மீண்டும் எதிரி எமது மக்கள் மீது அடாவடித்தனங்களையும் அராஜகங்களையும் தொடருவானேயானால் அரச பயங்கரவாதத்துக்கு எதிராக - சர்வதேசத்திடம் நியாயப்படுகளைக் கோரியும் மீண்டும் எமது போராட்டத்தை ஆரம்பிப்போம். - என்றுள்ளது.

## மஹிந்தவின் கரும் போக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்கள் வருமாறு:-

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கு மானால் ஆயுதப்படைகளின் அத்துமீறல்களைத் தடுக்க உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும்படி அவரை நான் கோருவேன். ஆயுதப்படைகள் ஒழுங்குக் கட்டுப்பாட்டோடு செயற்பட வேண்டும். சட்டவிரோதக் கொலைகளைச் செய்ய ஆயுதப்படைகள் அனுமதிக்கப்படக் கூடாது என்பதை நான் அவரிடம் தெரிவிப்பேன்.

"துணைப் படைகளின் ஆயுதங்களைக் களைந்து, அவற்றைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அமைதிப் பேச்சுக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துமாறும் நான் அவரைக் கோருவேன்.'' - இவ்வாறு பாலசிங்கம் குறிப்பிட்டார்.

ஜூன் 15 ஆம் திகதி அறுபது பொது மக்கள் கொல்லப்பட்ட - பஸ் மீதான - தாக்குதலுக்கு புலிகள் மீது குற்றம் சுமத்தப்படுவதை அவர் மறுத்துரைத்தார்.

"இராணுவத் துணைப் படைகளின் பல்வேறு வன்முறைகளுக்கு புலிகள் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது. அண்மையில் ஒரு குண்டு வெடிப்பில் அறுபது குடிமக்கள் கொல்லப்பட்டனர். அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இச்சம்பவம் நடந்துள்ளதால் இது துணைப் படைகளின் வேலையாக இருக்கலாம் என்று நாம் குற்றம் சுமத்துகின்றோம். அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குப் போய் அங்கு நாங்கள் குண்டுகளையோ, கண்ணிகளையோ பொருத்தி சேதங்களை விளைவிக்க முடியாது.

"கடந்த கால நிகழ்வுகள் காரணமாக எமது இந்த மறுப்பைப் பலர் ஏற்றுக்கொள்கின்றார்கள் இல்லை. எல்லா வகையான வன்முறை வழிகளிலும் சம்பந்தப்பட்டவர்கள் நாங்கள் என்பதால், இப்போது எங்காவது ஒரு வன்முறையோ, கொலையோ நடந்தால் எல்லோரும் அதற்கான குற்றச்சாட்டை எங்கள் மீது சுமத்தி விடுகின்றனர்." - என்றார் பாலா. (ஐ)

## சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர் தனது பத்திகளில் வெளிக்கொணர்ந்த விடயங்கள் புலனாய்வுத்துறை வட்டாரங்களைக் கடும் சீற்றத்துக்கு உள்ளாக்கியிருந்தன என்றும் இதனால், இவர் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்பட்டு வந்தார் என்றும், ஆனாலும் சம்பத் எவருக்கும் அஞ்சாமல் தொடர்ந்தும் தனது பத்திகளில் துணிச்சலாக எழுதி வந் தார் என்றும் சிங்கள ஊடக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவரது கட்டுரைகள் 'இருதின', 'லக்பிம', 'சத்தின' ஆகியவற்றில் வெளிவந்திருந் தன.

இவற்றை விட ரி.என்.எல். தொலைக்காட்சிக்கும் இவர் பணியாற்றியிருந்தார்.

இவரது கொலையை ஊடக அமைப்புகள் பலவும் கண்டித் திருக்கின்றன. (ஐ)

## அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கா பீரங்கித் தொகுதி ஒன்றை 2 லட்சத்து 45 ஆயிரத்து 275 டொலர்களுக்கு வழங்க முன்வந்துள்ளது.

இஸ்ரேலியப் பீரங்கியின் விலை 3 லட்சத்து 37 ஆயிரம் டொலர்களாகும்.

இஸ்ரேல் தயாரிப்பு டோராப் படகுகளில் தற்போதுள்ள 23 மில்லி மீற்றர் பீரங்கிகளுக்குப் பதிலாக புதிய 30 மில்லிமீற்றர் பீரங்கிகள் பொருத்தப்படவுள்ளன.

15 டோறாப் படகுகளில் இவற்றைப் பொருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடற்படையின் காங்கேசன்துறை - திரு கோணமலை பயணங்கள் நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதால் இந்தப் பீரங்கிகள் கொள்வனவை அரசு துரிதப்படுத்தியுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

## ஓட்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு இலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஓட்டோவின் சாரதி காயம் எதுவுமின்றித் தப்பித்துக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. உயிரிழந்த யுவதியின் சடலம் மரண மற்றும்பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்தியின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது. (ரி)

## வடமராட்சி மீன்பிடி தடையில் தளர்வு

யாழ்ப்பாணம்,ஜூலை3

வடமராட்சிக் கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருந்த தடை நேற்றுமுதல் சில பகுதிகளில் தளர்த்தப்பட்டுள்ளது எனப் படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

வல்வெட்டித்துறையில் இருந்து கற்கோவளம் வரையான பகுதிகளில் மீன்பிடிக்க நேற்றுமுதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் -

தொண்டைமானாறு முதல் வல்வெட்டித்துறை வரையான பகுதிகளில் மீன்பிடித் தடை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்றும் -

படை அதிகாரிகள் கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு அறிவித்துள்ளனர்.

## படையினரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் இடம்பெற்ற வேளை அப்பகுதி ஊடாகப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றின் சாரதியும் அதில் பயணித்த பொதுமக்கள் சிலரும் படையினரின் தாக்குலுக்கு இலக்காகினர் என்றும் - பலத்த காயங்களுக்கு இலக்கான சாரதி சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

இதற்கிடையில் -

நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு சமீபமாக நேற்று மாலை 5 மணியளவில் வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றை படையினர் வழிமறித்தனர் என்றும் அது நிற்காமல் ஓடவே படையினர் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது. (49)

## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வநாயகி முத்துக்குமாரசுவாமி

(இளைப்பாறிய ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி)

கைதடியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி தெய்வநாயகி முத்துக்குமாரசுவாமி அவர்கள் நேற்று (02.07.2006 ) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம்-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், செல்லப்பா முத்துக்குமாரசுவாமி (இளைப்பாறிய உப அதிபர், யாழ். இந்துக்கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் அனுசூயா, கௌரி (சிரேஷ்ட உதவி இரசாயன பகுப்பாய்வாளர், அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம், கொழும்பு), காலஞ்சென்ற யோககுமார் ஆகியோரின் அருமைத் தாயும் Dr. ரவிராஜ் (சத்திரசிகிச்சை நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை), ரமணா (முகாமைத்துவ பணிப்பாளர், Computer Land) ஆகியோரின் அன்பு மாமியும் குகப்பிரியன், பிரதாகினி, விஷ்ணுபிரியன், அஷ்வினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விமலாதேவி, யோகேஸ்வரி, தையல்நாயகி (நெதர்லாந்து), சிவயோகசுந்தரம் (U.S.A), Dr. யோகவிநாயகன் (சுகாதாரக் கல்விப் பணியகம், கொழும்பு) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற Dr. பேரின்பநாயகம், சண்முகசுந்தரலிங்கம் (நெதர்லாந்து), இராஜேஸ்வரி (U.S.A.), Dr. லலிதா (போதனா வைத்தியசாலை, களுபோவிலை) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.07.2006) திங்கட்கிழமை காலை 8 மணிமுதல் பொரளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் பிற்பகல் ஒரு மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 5 மணிக்கு மலர்சாலை யிலிருந்து புறப்பட்டு, 5.30 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் (Fire wood Section) தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*இல. 33 1/1, அருத்துசா லேன்,*
*வெள்ளவத்தை.*
*தொ.பே. 0112 360860.*

தகவல்:
**செ.முத்துக்குமாரசுவாமி**
**(கணவர்)**

(சி-49941)

### திருமதி சின்னத்தங்கம் இராசையா



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கரம்பன் மேற்கைச் சேர்ந்தவரும் தற்போது இல. 124, நாவலர் வீதியை வதிவிடமாகவும் (மனோகரா திரையரங்கின் பின்புறம்) கொண்ட சின்னத்தங்கம் இராசையா நேற்று (02.07.2006) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் புஸ்பதேவி (கோப்பாய்), நாகபூஷணி (யாழ்ப்பாணம்), சிவபாதலிங்கம் (சுவிஸ்), ஜெயபாலசிங்கம் (பண்டத்தரிப்பு), தனபாலசிங்கம் (அரியாலை), குணபாலசிங்கம் (கனடா), இறஞ்சினிதேவி (கனடா), மஞ்சுளாதேவி (கனடா), பஞ்சபாலசிங்கம் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயும் யேசுதாசன் (அமரர்), சுந்தரமூர்த்தி (அமரர்), புஸ்பரட்ணம், வசந்தா, கோமளா, ஜெயந்தி, இரவீந்திரன், சகாதேவன், புனிதவதி (வேவி) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.07.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*124, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
*மகன்.*

(51837)

**Hardware with Networking**
**Microsoft** கணனி பொறியியலாளர்களினால் பயிற்சிகள்
முதலில் பதிவுசெய்யும் 10மாணவர்க்கு கற்கைநெறி கட்டணம் இல்லை
அனைவருக்கும் **Free CD's**
CISCO, A+, N+, MCSE கற்கைகளுக்கு புலமைப் பரிசில்கள்
MCS Supported By UNDP/JRRP மேலதிக விபரங்களுக்கு நேரில் 324, Palaly Road, Jaffna.

**SUBRA (14)**
சித்தன்கேணி
**Spoken English and Grammar by BRITTO**
*புதிய பிரிவு - 03.07.2006 பிற்பகல் 3.00*

பிரத்தியேக கணிதபாட வகுப்புகள்
**Year 4 To Year 11**
தொடர்பு:
077 9773182
077 675504
0779901087

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.07.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org